சைவ சித்தாந்த மன்றம், கனடா

அன்பே சிவம்

உ

சிவ சிவ

# அன்புநெறி

மலர்-21 ஆகஸ்ட் 2016 இதழ்-1

$2.00

## திருவருட் செல்வர் விழா மலர்-2016




சைவ மெய்யியல் மாதுமெய் பொடிப்பத்
தமிழுந் தெய்விகத் திருநிலைக்குயரத்
தெய்வநீறு கண்டிகையும் அஞ்செழுத்துந்
திசைஅடங்கலுந் தேசுமிக் கொளிர
உய்வதோர் நெறி நால்வர் நன்னெறியென
ஓகை மீக்கிளர்ந் துலகெலாம் மலர
வைய முய்ந்திட வாழ்வருள் நால்வர்
மலர்ச் செழும்பதம் வாழ்த்தி உய்வுறுவாம்

– கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா

# DR. S. RAVEENDRAN DENTISTRY PROFESSIONAL CORP.

## பல் மருத்துவ நிலையம்

**பல துறைகளில்**

**இரு இடங்களில்**

## டாக்டர் சபாபதி இரவீந்திரன்

BDS., MS, F D S R C S. (Eng.)

**MISSISSAUGA OFFICE**

(அதே இடத்தில் Hurontario & Dundas)

3025 Hurontario St., Suite 102

**(905) 270-7844**

**SCARBOROUGH OFFICE**

1139 Morningside Ave., Suite 25

(Morningside & Sheppard)

**(416) 283-9000**


## அன்புநெறி சந்தா விபரம்

தனிப்பிரதி **$2.00**

வருடச் சந்தா (12 இதழ்கள்) $20.00

**அஞ்சல் பொதிச் செலவுடன் வருடச் சந்தா:-**

| | |
|---|---|
| **கனடா:** | Can. $ 40.00 |
| **அமெரிக்கா:** | Can. $ 45.00 |
| **ஏனைய நாடுகள்:** | Can. $ 60.00 |

**தொடர்புகட்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா**

Saiva Sidhdhantha Manram, Canada

1008-50 Elm Dr. E. , Mississauga, ON, L5A 3X2 Canada

(Tel.: 905-566-4822)

உ
சிவ சிவ

# அன்புநெறி

மலர் -21 | துர்முகி வருடம் ஆடி–ஆவணி, ஆகஸ்ட் 2016 | இதழ் -1
திருவள்ளுவர் ஆண்டு - 2047

**பொருளடக்கம்** **பக்கம்**

1. சைவசித்தாந்தமன்றம் கனடா....அகவை இருபது 4
2. வாழ்த்துரை . . . . . . . . . . 8
3. வாழ்த்து . . . . . . . . . . . 9
4. வாழ்த்துச்செய்தி . . . . . . . . 11
5. வாழ்த்து . . . . . . . . . . 12
6. வாழ்த்துரை . . . . . . . . . 14
7. வாழ்த்து . . . . . . . . . . 15
8. வாழ்த்துரை . . . . . . . . . 16
9. சம்பந்தன் தமிழ் ஆர.மொழிவார்கள் .. . . . 17
10. முக்குளநீர் . . . . . . . . . . . . . 19
11. திருமூலரும் திருஞானசம்பந்தரும் . . . . 24
12. இப்படியல்லவா தோழர்கள் இருக்க வேண்டும் 29
13. திருவாசகத்தில் கையாளப்படும் பாவினங்கள். 31
14. மன்றத்தில் நிகழ்ந்தவை . . . . . . 33
15. ஆடும் பெருமானின்..... . . . . . . . . 34
16. ஒன்பதாம் திருமுறை அமைப்பும், சிறப்பும் 37
17. சைவபரிபாலனசபை சைவநெறி, தமிழ் பெறுபே 42
18. சேக்கிழார் காட்டும் மனையறம் . . . . . 43
19. என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியர் . 46
20. நீத்தார் நினைவு . . . . . . . . 49

**ஆசிரியர் :** திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
**நிர்வாக ஆசிரியர்:** திரு. தி. விசுவலிங்கம்
**உதவி ஆசிரியர்:** திருமதி அநிதா திருமுருகா
**வெளியீடு:** சைவசித்தாந்த மன்றம், கனடா



**சைவ சித்தாந்த மன்றம், கனடா**
Saiva Sidhdhantha Manram, Canada 1008-50 Elm Dr. E.
Mississauga, ON L5A 3X2 Canada
Fax/Tel (905) 566-4822 Email:- saivamanram@gmail.com
Web.: www.saivasidhdhanthamanram.com

# சைவ சித்தாந்தமன்றம்,கனடா அன்புநெறி, சைவசமயகுரவர் பாடசாலை என்பனவற்றின் அகவை இருபது.

கனடா சைவசித்தாந்த மன்றமும், அதனால் நடத்தப்படும் சைவசமயகுரவர் பாடசாலையும், மன்றத்தினால் வெளியிடப்படும் மாதாந்த சைவ சஞ்சிகை அன்புநெறியும் இருபது ஆண்டு நிறைவை அடைந்துள்ளன. அன்புநெறி *1996* ம் ஆண்டு ஆகஸ்ட் (ஆடி– ஆவணி) மாதம் பிறந்தது. முதல் இதழ் திருவருட்செல்வர் விழா இதழாக ஆகஸ்ட் *1996* இல் வெளிவந்தது. ஓராண்டு காலத்தில் *12* இதழ்களாக இருபது ஆண்டுகள் நிறைவில் *240* இதழ்கள் வெளி வந்துள்ளன. இவ்வாண்டு ஆகஸ்ட் *14, 2016* இல் மலர் *21* இதழ் *01* (*241* ஆவது இதழ்) வெளிவருகின்றது. அன்புநெறி சிவமணமும் திருநெறிய தமிழ் மணமும் பரப்பி வர சிவபெருமான் திருவருளே காரணமாகும்.

இந் நிறுவனங்களின் வளர்ச்சியும் சிறப்பும், இறைவன் திருவருளாலும், அவற்றில் பங்கு கொண்ட மன்ற நிர்வாக உறுப்பினர்களதும், அங்கத்தவர்களதும், மாணவர்களதும், ஆசிரியர்களதும், பெற்றோரதும் கடும் உழைப்பும், அவர்களின் தன்னலமற்ற தொண்டுப் பணிகளாலும் ஆனது. இப் பணிகளைத் தடங்கலின்றி நடத்தி வர, யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தை மன்றம் தொடங்கிய காலத்திலிருந்து தந்துதவி வருகின்ற, இல்ல முகாமைக்கும், காலத்திற்குக் காலம் நிர்வகித்து வரும் நிர்வாகக் குழுவினருக்கும் நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துப் போற்றுகிறோம்.

இப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தோர் ஆதீன முதல்வர்களும், மன்றக் காப்பாளர்களும், அன்புநெறி ஆசிரிய குழுவைச் சேர்ந்தோரும், புரவலர்களும், விளம்பரதாரர்களும், சந்தாதாரர்களும், வாசகர்களும் சைவ அன்பர்களும் ஆவர். மற்றும் அன்புநெறிக்கு விடயங்கள் எழுதுகின்ற அறிஞர்களின் பங்களிப்பு உயர்ந்தது. இவர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளையும், பணிவான

வணக்கங்களையும் தெரிவித்துப் போற்றி மகிழ்கிறோம். இனி வரும் காலங்களிலும் உங்கள் ஆதரவு தொடர்ந்து இருக்க இறைவன் திருவருளை வேண்டுகிறோம்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஒக்ரோபர் 2015 இல் நடத்திய சைவநெறி, தமிழ் ஆகிய தேர்வுகளிலும், கொழும்பு விவேகானந்தா சபை நவம்பர் 2015 இல் நடத்திய சைவசமயப் பாடப் பரீட்சையிலும் சைவசமயகுரவர் பாடசாலை மூலம் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சைவசமயப் பாடப் பரீட்சையில் சிறப்புப் பெறுபேறுகள் பெற்றுள்ளனர். (விபரம் பக்கம் 5, 40 இல் உள்ளது.) இப் பரீட்சைகளுக்கு சைவசமயகுரவர் பாடசாலை மாணவர்கள் வருடந்தோறும் தோற்றிச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். சைவ அன்பர்கள், பெற்றோர்கள், சைவப் பெரியார்கள் தங்கள் பிள்ளைகளையும், தம் உற்றார். உறவினர், நண்பர்கள் பிள்ளைகளையும் இவ் வகுப்புகளில் சேர்த்துப் பயன்பெற உதவ முன்வரவேண்டும் என்று அன்பான வேண்டுகோள் விடுக்கிறோம். காலப்போக்கில் அப் பிள்ளைகள் சைவத்தையும் தமிழையும் கற்றுச் சிறந்த சைவப் பிள்ளைகளாக வாழ்வார்கள்.

திருவருட் செல்வர்களைப் போற்றிப் பரவும் இவ்விழா இனிதே நிகழ்வுற, அருள்மிகு சிவகாமி அம்மை உடனுறை அம்பலவாணர் பெரும் கருணை வேண்டி வணங்குகிறோம்.

## தங்கப் பதக்கம் பெறும் மாணவி
## செல்வி றக்ஷிக்கா திருமுருகா



செல்வி றக்ஷிக்கா திருமுருகா கனடா சைவசித்தாந்த மன்றம் நடத்தும் சைவசமய குரவர் பாடசாலையில் 2004ஆம் ஆண்டி லிருந்து பாலர் வகுப்பிலிருந்து கல்வி கற்று வந்துள்ளார். 2007 இல் இருந்து 2015 வரை கொழும்பு விவேகானந்தா சபை நடத்தும் சைவசமய பாடப் பரீட்சையைத் தரம்-3 இலிருந்து தரம்-11 வரை தோற்றி ஒவ்வோராண்டும் முதற் பிரிவில் (A) சித்தி பெற்று வந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும் சைவநெறிப் பாடத் தேர்விற்கும், சைவசமயகுரவர் பாடசாலை மாணவர்கள் முதன் முதலாக நவம்பர் 2008 இல் தோற்ற விடப்பட்டனர். இவர் அவ்வாண்டு தொடக்கம் தரம் 5 இலிருந்து தரம் 11 வரை சைவநெறித் தேர்விற்கு தோற்றி முதற்பிரிவில் (A) சித்தி பெற்றுள்ளார். 2011–2014 தமிழ்மொழித் தேர்விலும் முதற் பிரிவில் சித்தி பெற்றுள்ளார்.

செல்வி றக்ஷிக்கா திருமுருகா சைவசமயகுரவர் பாடசாலை நடத்திய பரீட்சைகள் யாவற்றிலும் திறமைச் சித்திகள் பெற்றவர். மன்றம் காலத்திற்குக் காலம் நடத்திய பேச்சு, மனனம், பண்ணிசைப் போட்டிகளிலும் சிறப்பிடம் பெற்றவர். மன்றம் ஆண்டுதோறும் நடத்தி வரும் திருவருட்செல்வர் விழாக்களிலும் திருவாசக விழாக்களிலும், சைவசமயகுரவர், நாயன்மார், அருளாளர் குருபூசை வழிபாடுகளிலும், திருவாசகம் முற்றோதல் வழிபாடுகளிலும் தமக்குக் கொடுத்த செயற்பாடுகளைத் திறமையாகச் செய்து பாராட்டுகள் பெற்றவர்.

செல்வி றக்ஷிக்கா தான் கற்கும் கல்லூரியில் வரும் செப்ரெம்பர் 2016 இலிருந்து தரம் 12 இல் படிக்க உள்ளார். இவர் அக்கல்லூரியின் இசைக்குழுவில் உள்ளார். அங்கு புல்லாங்குழல் இசையும் கற்று வருகிறார். மற்றும் சங்கீதம், நீச்சல் பயிற்சி முதலிய பல்வேறு துறைகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

செல்வி றக்ஷிக்கா திருமுருகா பணிவும், அடக்கமும், சைவசமய ஒழுக்கமும் நிறைந்த மாணவி. இவரை மாணவியாகப் பெற்றதையிட்டு சைவசமயகுரவர் பாடசாலையும், கனடா சைவ சித்தாந்த மன்றமும் பெருமை கொள்கின்றன.

கனடா சைவ சித்தாந்த மன்றம், திருவருட் செல்வர் விழா–2016 இல் செல்வி றக்ஷிக்கா திருமுருகா அவர்களைப் பாராட்டி மன்றம் தங்கப் பதக்கம் அளித்து கௌரவிக்க உள்ளது. செல்வி றக்ஷிக்கா தமது உயர் கல்வியிலும், நுண் கலைகளிலும் எடுக்கும் முயற்சிகள் யாவற்றிலும் சிறப்புற்று விளங்கவும், உடல் நலத்துடன் வளமுடன் வாழவும் அருள்மிகு சிவகாமி உடனுறை நடராசப் பெருமான் திருவருள் பாலிக்க வேண்டி வணங்கி உளமார வாழ்த்துகிறோம்.

செல்வி றக்ஷிக்கா, திரு. சு. திருமுருகா திருமதி அநிதா திருமுருகா தம்பதிகளின் இளைய புதல்வியாவார். மூத்த புதல்வி செல்வி றக்ஷனா திருமுருகா அவர்களும் 2013 திருவருட்செல்வர் விழாவில் தங்கப் பதக்கம் அளித்து கௌரவிக்கப் பெற்றவர். திரு. திருமுருகா குடும்பத்தினர் மன்றத்தின் ஆயுட்கால உறுப்பினர். திருமதி அநிதா திருமுருகா மன்றத்தின் செயலாளராகவும், சைவசமயகுரவர் பாடசாலை ஆசிரியராகவும், அன்புநெறி உதவி ஆசிரியராகவும் உள்ளார். பெற்றோர் இருவருமே மன்றப் பணிகள் யாவற்றிலும் முன்னின்று பணிகள் ஆற்றுபவர்கள். திரு. திருமுருகா குடும்பத்தவர் அனைவருக்கும் மன்றத்தின் சார்பில் பாராட்டையும் வாழ்த்துக்களையும் கூறுகிறோம்.

ஆசிரியர் தி. வி.

## விவேகானந்தசைப, கொழும்பு
## அகில இலங்கைச் சைவசமயபாடப்பீட்சை-2015
## தோற்றிய சைவசமயகுரவர் பாடசாலை
## மாணவர்களின் பெறுபேறுகள்

| மாணவர் பெயர் | தந்தை பெயர் | தரம் | பெறுபேறு சைவநெறி |
|---|---|---|---|
| செல்வன் சஜீவன் | விஜயரங்கன் | 5 | A |
| செல்வி ஹரிணி | யோகேஸ்வரன் | 5 | A |
| செல்வன் தரன் | நடராசா | 6 | A |
| செல்வன் பிரஜீவன் | விஜயரங்கன் | 6 | B |
| செல்வன் ஹரி | யோகேஸ்வரன் | 7 | A |
| செல்வி மீனுசா | பத்மகாந்தன் | 7 | A |
| செல்வி ராகவி | ரங்கநாதன் | 8 | A |
| செல்வி அஸ்வினி | இராஜானந்தன் | 8 | A |
| செல்வி றக்ஷிக்கா | திருமுருகா | 11 | A |

தோற்றிய மாணவர்–9 சித்தியடைந்தோர்–9 சித்திவீதம் – 100%



உ
சிவ சிவ

திருப்பனந்தாள் காசித்திருமட அதிபர்
கயிலை மாமுனிவர்,
**திருவளர்திரு காசிவாசி**
**முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்**
**சுவாமிகள்**
**அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துரை

கனடா சைவசித்தாந்த மன்றம் 21 ஆவது திருவருட்செல்வர் விழாவை 14-08-2016 அன்று நடத்துவதும், அன்புநெறி–ஆண்டு மாத இதழ் திருவருட்செல்வர் விழா மலராக வெளியிடுவதும் அறிய மகிழ்ச்சி.

அருட்பெருகு தனிக்கடலும் எனச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்தவண்ணம் திருவருட்செல்வர்களாக அவதரித்து, செயற்கரிய செய்த சிவநேசச் செல்வர்கள் பெயரால் அவர்தம் நினைவு போற்றும் மலராய் வெளிவருவது சாலச் சிறப்புடையது,

விழாமலர் கூடுதல் பக்திப் பனுவல் சாரம் கனிந்த சந்தன மலராய்க் கமழவும் விழா அன்பர்தம் கூட்டுழைப்பில் சிறந்து நிறைவுறவும், செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம் சிவசிவ



**அருள்மொழிஅரசி**
**திருமதி வசந்தா வைத்தியநாதன்**
அவர்களது வாழ்த்து
**திருவருட்செல்வர்விழா 2016**

பொருளற்றார் பூப்பதொருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது
(அருளுடைமை – குறள் 248

“எத்தவத்தை செய்தாலும், ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே” என்பதற்கொப்ப நாம் உலகியலிலே இருந்தாலும் அதனுள்ளேயே மூழ்கி நம்மை தொலைக்காமல் இறையுணர்வில் நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். பலாப்பழத்தை எடுத்துச் சுளைகளை ஆயுமுன்னே, பலாப்பிசின் நம் கையைப் பற்றிக் கொள்ளாதிருப்பதற்கு முற்காப்பாக நமது கைகளில் எண்ணெய் தடவிக் கொள்வது போல, உலகப் பற்றுக்கள் நம்மைப் பற்றிக் கொள்ளாது இருப்பதற்கு பற்றற்றான் பற்றினைப் பற்றிக் கொள்ள வேண்டும். அவர்களே உண்மை அடியவர்கள். உலகில் உயரிய செல்வர்கள்.

“அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தங் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெரிதும் வேண்டேன்.”

என்ற தொண்டரடிப் பொடி ஆழ்வாரை விட செல்வந்தர்கள் வேறு யார்? மண்ணாளும் மன்னர்களைவிட மாலவனையே உயர்விடம் ஆக மதித்த அந்த உத்தமர்களே உண்மையான திருவருட் செல்வர்கள்

“ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅலது ஒன்று இலார்”

“கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.” –சேக்கிழார்


சிவனடி மறவாச் செல்வர்களை தொழுது போற்றி இனங்காட்டும் திருக்கூட்டச் சிறப்பு பதினொரு பாடல்களுமே சைவர்களுக்கு விலைமதிக்க ஒண்ணாத பொக்கிஷம்.

கனடா சைவசித்தாந்த மன்றம் மேற்கொள்ளும் பல்வேறு சைவசமயப் பணிகளுள் மன்றம் நடத்தும் திருவருட்செல்வர்விழா தலைமைபூணும் சிறப்புடையது. இவ்வாண்டு ஆகஸ்ட் 14ம் நாள் இருபத்தோராவது திருவருட்செல்வர் விழா நிகழ இருக்கின்றது.

இவ்விழா சிறக்கவும் சைவமக்களின் மனங்களில் அறமும், ஒழுக்கமும் தழைத்துப் பயன் கொள்ளவும் அயராது பாடுபடும் சைவப்பெரியார் திரு. தி. விசுவலிங்கம் அவர்களையும் அவரது துணைவியார் திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம் அவர்களையும் மனம் நிறைந்த அன்புமலர்களைத் தூவி நீடு வாழ வாழ்த்துகிறேன்.

நலமே தழைக

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பு
மின்றெழுந்தருளப் பெற்றபேறு இதனால்
எற்றைக்குந் திருவருள் உடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.
– சேக்கிழார்



அன்புநெறி சிறப்பாசிரியர், மன்றக் காப்பாளர்

## கலாநிதி கவிஞர் வி.கந்தவனம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கனடா சைவசித்தாந்த மன்றம் ஆண்டுதோறும் பக்திசிரத்தையுடன் நடத்திவரும் திருவருட்செல்வர் விழா இவ்வாண்டு ஆகஸ்ட் 14ல் கொண்டாடப்படவுள்ளது.

கொண்டாட்டம் பூசைவழிபாடு, திருமுறை ஓதுதல், வாழ்த்துரைகள், மாணவர் பங்களிப்புகளெனப் பலவகை நிகழ்ச்சிப்பாடு களைக் கொண்டிருப்பது வழக்கம்.

இவற்றுள் மாணவர் நிகழ்ச்சிகளே அதிகம் இருக்கும். அவர்களது பேச்சுக்களும் திருமுறை மனப்பாடங்களும் நாடக நடிப்புகளும் அவையோரை அகமகிழச் செய்யும்.

அவர்களை இத்தகைய நிகழ்ச்சிகளிற் பெரிதும் ஈடுபடுத்தி, எமது சைவப் பாரம்பரியங்களை அறியவைப்பதும் அனுபவிக்கச் செய்வதும் சிந்தித்து அவற்றைத் தெளியவைப்பதும் அதிபர் சிவநெறிச்செல்வர் திரு. தி. விசுவலிங்கம் அவர்களினதும் துணைவியார் திருமதி வி. வடிவழகாம்மாள் அம்மையாரதும் பெருநோக்கமாகும். இவர்கள் இருவரும் மற்றுமுள்ள சைவசித்தாந்த மன்றத்து உறுப்பினர்களும் ஆசிரியர்களும் பண்ணிசை ஆசிரியர் திருமதி சறோ ஜெகநாதன் அவர்களும் கனடாவிற் சைவத்தை வளர்க்கச் செய்யும்வகை சொல்லவும் பெரிதே!

சைவசித்தாந்தம் தன்னேரில்லாத் தனிப்பெருந் தத்துவம். அதனைப் புகட்டவல்லவர் அறிவுள்ளவராக மட்டுமன்றி அப்பழுக்கற்ற ஒழுக்கசீலராகவும் இருத்தல் வேண்டும்.


அதிபர் விசுவலிங்கம் அவர்களும் திருமதி வடிவழகாம்பாள் அவர்களும் அறிவும் ஆற்றலும் மிக்க ஆசிரியர்கள். ஒழுக்கம் என்னும் குன்றேறி நிற்கும் குணசீலர்கள்.

இவர்களின் வழிநடத்தலிற் சைவச் சிறுவர்கள் சிறந்த ஒழுக்கசீலர்களாக வளருவது அவர்களது பெற்றோர் செய்த தவமேயெனலாம்.

யானறிந்த அளவில் சைவத்தைச் சைவமுறையிலே வளர்த்துவருவது கனடா சைவசித்தாந்த மன்றம் ஒன்றே எனலாம்.

திருவருள் பெற்ற செல்வர்கள் இவர்களுக்கு எல்லா நலன்களையும் அள்ளி வழங்கவும் திருவருட் செல்வர் விழா சிறப்புற நடைபெறவும் அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

– – – – –



**அன்புநெறி** சிறப்பாசிரியர் சிட்னி,
அவுஸ்திரேலியா

## கவிஞர் நா. மகேசன்

அவர்களின்

## திருவருட்செல்வர் விழா வாழ்த்து

சொல்லும் செயலும் ஒன்றாக
செம்மை யான கொள்கையுடன்
அல்லும் பகலும் அயராதே
அன்பு நெறியிற் தான்சென்று
நில்லும் எனவே எமைநிறுத்தி
நிமிர்ந்து நிற்க எமையூக்கி
வெல்லும் கனடா அன்புநெறி
வாழ்க என்றும் வாழியவே.

இரண்டு பத்து ஒன்றோடு
இணைந்த ஆண்டு விழாவாக
பரமன் அருளால் மலர்விரிய
பலரும் கூடி எழுத்துகளை
தரவே முனையும் இவ்வேளை
தமியேன் தந்தேன் இப்பாடல்
கரங்கள் கூப்பி அருட்செல்வர்
கருணை என்றும் வாழியவே.


ஓடும் பொன்னும் ஒன்றெனவே
ஒருங்கே நால்வரும் காட்டிநின்ற
நாடுகள் அறிந்த உண்மையினை
நாளும் எமக்கு அறிவுறுத்தி
தேடும் திருவருட் செல்வரது
திருமறை தினம் தினமென்று
பாடு பட்டு உழைக்கின்ற
பண்பார் மன்றம் வாழியவே.

சிறுவர் நாளும் திருமுறைகள்
செந்தமி ழோடு கற்றிடவும்
மறவா தவர்கள் சைவநெறி
மகிழ்ந்து ஒழுகி நல்லோராய்
திறமை பலவும் தாம்பெற்று
திகழ்ந்து தமிழர் பண்பாட்டை,
அறத்தைப் புகழை நற்பெயரை
அறியச் செய்வோர் வாழியவே.

இன்றும் என்றும் சைவமன்றம்
இனிதே சேவை செய்திடவே
நன்றே அதனை இயக்குகின்ற
நல்லோர் பலரும் என்றென்றும்
குன்றா உடலின் நலத்தோடே
குறையா உளத்தின் வளத்தோடே
நன்றே வாழ்க வாழ்கவென்றே
நயந்து வாழ்த்தினேன் வாழியவே.

– – – – –

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.
–சுந்தரர்



உ

அன்புநெறி சிறப்பாசிரியர், மன்றக் காப்பாளர்
**சித்தாந்தரத்தினம், கலாநிதி**
**க. கணேசலிங்கம்**
அவர்களது

## வாழ்த்துரை

ஒரு சமய சஞ்சிகை, தமிழ் மொழியில், இருபது ஆண்டுகளாக, மாதந்தோறும் தவறாது வெளிவருகிறது. அதுவும் புலம் பெயர் நாடொன்றில் வெளிவருவது தமிழருக்குப் பெருமையும் வியப்பும் அளிக்கறது.

சிறப்பு மிக்க இச்சஞ்சிகை கனடா நாட்டிலிருந்து வெளிவரும் **அன்புநெறி** என்னும் இதழாகும். *கனடா சைவசித்தாந்த மன்றம்* இதனை வெளியிடுகிறது. இதன் ஆசிரியர் திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம் அவர்கள். நிர்வாக ஆசிரியர் திரு தி. விசுவலிங்கம் அவர்கள். சைவசித்தாந்த மன்றம் இப்பெருமக்களால் தோற்றுவிக்கப்பட்டது.

இம்மன்றம் பயன்தரு பணிகள் பல செய்து வருவதைப் பலரும் அறிவர். வாரந்தோறும் சமய குரவர் பாடசாலை நடத்தி மாணவர்களுக்கு தமிழ் சைவ அறிவூட்டுகிறது. ஆண்டுக் கொருமுறை பரீட்சை வைத்து அவர்களின் அறிவுத் திறனை வளர்க்கிறது. சைவ அருளாளரின் குருபூசை, திருவருட் செல்வர் விழா, திருவாதிரை விழா என்று பரந்துபட்ட பணிகள் செய்கிறது. அன்புநெறி இதழையும் பயனுள்ள நூல்களையும் வெளியிடுகிறது.

இத்தகைய பெரும் பணிகளை நீண்ட காலமாகத் தொடர்ந்து செய்துவரும் திரு விசுவலிங்கமும் அவருக்கு உறு துணையாக நின்றுழைக்கும் அவரின் துணைவியாரும் மன்றத்தின் நிர்வாக உறுப்பினர்களும் சைவத் தமிழ் உலகின் பாராட்டுக்குரியவர்கள்.

அவர்கள் நலமாக வாழவும் அவர்களின் நற்பணி தொடரவும் இறையருளை வேண்டி. இருபதாவது ஆண்டு காணும் **அன்புநெறி** இதழ் வளர்க என வாழ்த்துகிறோம்.

– – – – –



சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றம்,
துணைத் தலைவர்,
**சிவத்திரு முருகு இராமலிங்கம்**
அவர்களின்

## வாழ்த்து

கனடா சைவசித்தாந்த மன்றம் சார்பில் வெளிவரும் அன்புநெறி 2016 ஆகஸ்ட் மாத இதழ் "திருவருட்செல்வர் விழா மலராக" மலர உள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

கனடாவில் அந்நியச் சூழ்நிலையில் வளரும் நம் தமிழச் சிறுவர்கள் தமிழையும், சைவத்தையும் அறிய வாய்ப்பில்லை. தம் சிறுவர்களுக்கு தமிழையும், சைவத்தையும் அளித்து அவர்களை நெறிப்படுத்த பெற்றோர்களாலும் இயலாத நிலை.

இத்தகைய சூழ்நிலையில் கனடா சைவசித்தாந்த மன்றம் ஆற்றி வரும் பணி அளவிடற்கரியது. புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ச் சிறுவர்களுக்கு நமது சைவசமய பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பேணவும், இன மொழி உணர்வை வளர்க்கவும், கலாச்சாரத்தை அறியவும் இம்மன்றத்தின் பணிகள் பெரிதும் துணை புரிகின்றன.

அன்புநெறி ஆன்மீக மாத இதழை வெளியிட்டும், தமிழ் சைவ வகுப்புக்களை நடத்தியும் சிறுவர்கள் சைவசமயம் பற்றிப் பேசுதல், கட்டுரை எழுதுதல், ஆன்மீகக் கதை சொல்லல் போன்றவற்றில் அவர்களை ஈடுபடச் செய்தும் கனடா சைவசித்தாந்த மன்றம் சிறந்த தொண்டாற்றி வருகிறது.

இவ்விழா சிறப்புற நடைபெறவும், அதன் பயனாக அனைவரும் பயன்பெற்று இன்புறவும் அருள்மிகு சிவகாமசுந்தரி உடனாகிய தில்லைக் கூத்தப் பெருமான் அருள் பாலிக்க வேண்டி, அப்பெருமான் திருவடிகளை வணங்கி வாழ்த்தி அமைகிறேன்.

-----



அன்புநெறி சிறப்பாசிரியர்
சித்தாந்த கலாநிதி, சித்தாந்த செம்மணி, சைவநன்மணி,
சித்தாந்த சாகரம், சித்தாந்த வித்தகி, சிவஞானவாரிதி
**முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி,**
அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

சிவனோடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனோடொப் பாரிங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. – திருமந்திரம்

தேவர்குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகம் என்று உணர். –ஔவையார்


மக்கள் இறையருளைப் பெற முதலில் சமய ஒழுக்கங்களை மேற் கொள்ள வேண்டும். இறையுணர்வு இருந்தாலன்றிச் சமய ஒழுக்கங்களில் பற்று உண்டாகாது. பற்று உண்டாகச் சமய உணர்வை மனத்தில் நிலைநிறுத்த வேண்டும். இது அடிப்படையான பணி என்பார் தருமை ஆதீனம். இப்பணியைச் சீரிய முறையில் செயலாற்றி வருபவர் திரு. தி. விசுவலிங்கம், திருமதி வடிவழகாம்பாள் தம்பதியர். சமய உணர்வைச் சிறுவர்களிடையே வளர்த்து வருகின்றனர்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

என்று திருமூலர் கூறுகிறபடியும்

"என் கடன்பணி செய்து கிடப்பதே" என்று அப்பர் அருள்மொழிப்படியும், இத்தம்பதியர் கனடா சைவசித்தாந்த மன்றம் என்ற அமைப்பை ஏற்படுத்தி அன்புநெறி என்ற இதழைப் பல்லாண்டுகளாக வெளியிட்டு வருகின்றனர். அதன் ஆகஸ்ட் இதழ் திருவருட் செல்வர் விழா மலராக வெளியிடப்படும். இவ்வாண்டு இருபத்தோராவது மலராக வெளியிடப்படுகின்றது,

சைவத்தையும் தமிழையும் வளர்த்துவரும் இத்தம்பதியர் நல்ல உடல் நலத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ அங்கயற் கண்ணி உடனான ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.



# சம்பந்தன் "தமிழ்"-ஆர மொழிவார்கள்

கயிலை மாமுனிவர், திருவளர்திரு காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
திருப்பனந்தாள் காசித்திருமட அதிபர்

7ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் சைவம் மறுமலர்ச்சி பெற, மாற்றவர் மாண்பின்மை மக்கட்கும் புலப்படச் செய்ய, சமயகுரவருள்–முதல் இருவர் தோன்றினர். அவருள் சம்பந்தர் தோன்றிய நிகழ்வுக்குச் சேக்கிழார் மூன்று முழுமுதற் காரணங்களைச் சொல்கிறார்.

வேதநெறி தழைத்தல்
சைவத்துறை விளங்கல்
பூத பரம்பரை பொலிதல்

என்பவை அவை.

அவர் பெற்ற ஞானத்தைத் தனித்தனிப் படிவங்களில் அமைத்துச் சேக்கிழார் பாடுகிறார்.

‘‘சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும். பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையில்லாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்’’

இவற்றை ஒரே நேரத்தில் எய்தியவர் யார்? அவரே ‘தவமுதல்வர்’ என்கிறார்.

அத்தகு பெருமை மிக்க சம்பந்தப் பெருமான் அருளிய 1, 2, 3 ஆம் திருமுறைகள் ஞானவார் அமுதம் குழைத்து அம்மை அளிக்க அதனால் பெற்ற ஞானப்பிள்ளை நயந்தருளிய நன் மழலை மொழிகள்

திருமுறைப் பதிகங்களைத் ‘‘திருநெறிய தமிழ்’’ எனச் சம்பந்தர் பதிகத்தில் குறிப்பார்.

தன்னைப்பற்றித் திருக்கடைக்காப்பில் குறிப்பிடுகையில்....
‘‘கலிக்கோவையால் சந்தமே பாடவல்ல தமிழ் ஞானசம்பந்தன் சொல்’’

"உருவாரும் ஒண்டமிழ் மாலை"

"தண்ணார்சீர் ஞானசம் பந்தன்தமிழ் மாலை"

"ஞானசம்பந்தன் சொன்ன குலமார் தமிழ்"
"திருஞான சம்பந்தன் செந்தமிழ்கள்"

"ஞானசம்பந்தன் சொல் வழிபாடிவை"
என்று பற்பல இடங்களில் தமிழொடு இயைத்தே தம்மைக் குறிப்பார்.

அத்தகு மேன்மையும், தமிழொடு இசை கலந்த தகைமையும் மிக்க அவர்தம் பதிகங்களை எப்படி ஓத வேண்டும்.

நாடோறும் குறிப்பிட்ட ஒரு நேரம் வகுத்து, புறப்பொருள் களின் கவர்வுகளுக்கு உட்பட்ட நிலையில் பயில்வது அன்று. பின் எவ்வண்ணம் ஓதுவது. அதற்கும் விடை சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றிவினரால் சொல்ல இயலாதது. முக்குண வசத்தால் முறை பிறழ்ந்து நடப்பார்க்கு முடியாது. அதுவும் அவர்தம் திருவாய் மொழியால்தான் அடையாளம் காட்டப் பெற வேண்டும்.

"தழியார்சொல் ஞானசம் பந்தன் தமிழ்–ஆர மொழிவார்"
என்பது அது

தமிழை முழுவதுமாகச் சிந்தையில் இருத்தி, மற்றுப் பற்றின்றித் திருப்பாதமே மனம் பாவித்து ஓத வேண்டும் என்பது சம்பந்தரின் குறிப்புரை மொழி ஆகும்.

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.
– சேக்கிழார்



# முக்குள நீர்

(தமிழ்ப் பேரறிஞர் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்)

மனத்தை வசப்படுத்தி அமைதி காண்பதுவே எல்லாச் சமயத்திலும் காணும் அடிப்படையான நெறி. அதனை வசப்படுத்தும் முறைகளில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் அந்த முறைகளினால் அடையும் பயன் ஒன்றுதான்.

மனம் தனியே இயங்காது. அது ஐந்து பொறிகளின் வாயிலாக இயங்குகிறது; நுகர்ச்சியை அடைகிறது; அந்த நுகர்ச்சிகளின் வாசனையே தன் உருவமாக இருக்கிறது. மனத்தில் தோன்றும் எண்ணங்கள் ஐம்பொறிகளின் சார்புடையவை. கண் என்னும் பொறியினால் உருவத்தைக் காண்கிறோம். அந்தக் காட்சி மனத்தில் நினைவாகப் பதியும். காதினால் ஒரு பெயரைக் கேட்கிறோம். அந்தப் பெயரும் மனத்தில் பதியும். இப்படியே ஐந்து பொறிகளின் அநுபவங்களும் மனத்தில் பதிந்து வாசனையாக நிற்கின்றன. நல்ல வகையிலே அநுபவங்கள் இருந்தால் மனத்திலே நல்ல வாசனை அமையும். அல்லாத வகையிலே இருந்தால் பொல்லாத வாசனை அமையும். மனம் நல்ல வாசனை அமைந்ததாக இருந்தால் நல்ல எண்ணங்களும் உயிருக்கு இன்பத்தைத் தரும் அமைதியும் அதனிடம் உண்டாகும். நல்ல வாசனை அமைவதற்கு ஐம்பொறிகளும் நல்ல நுகர்ச்சியை அடைய வேண்டும்.

ஐம்பொறிகளையும் நல்லோர்களுடைய தொடர்பினால் நல்ல செயல்களில் ஈடுபடுத்தலாம். நல்ல செயல்கள் பல வகை. இடத்தாலும் காலத்தாலும் அவை மாறுபடுகின்றன. அவற்றைத் தேர்ந்து செய்வது எளிதன்று. நல்ல செயல்களைச் செய்வது நல்லதுதான். ஆனால் அல்லாத செயல்களைச் செய்யாமல் இருப்பதுதான் மிக மிக முக்கியம். அதனால் ஐந்து பொறிகளும் பொல்லாத செய்கைகளில் ஈடுபடாமல் இருப்பதற்கு, அவற்றை இறைவனுடைய நினைவு வருவதற்குரிய செயல்களில் ஈடுபடுத்தும் தந்திரத்தை ஆன்றோர்கள் அறிவுறுத்தினர். ஒரு பண்டத்தைக் கையில் எடுத்த குழந்தையிடம், "அதைத் தொடாதே; போட்டுவிடு" என்றால் போடாது. அதற்கு வேறு ஒரு பண்டத்தைக் காட்டி, "இந்தா இதை வாங்கிக்கொள்" என்றால் அது நாம் சொல்லாமலே தன் கையில் உள்ளதைக் கீழே போட்டுவிட்டு நாம் கொடுத்ததை வாங்கிக் கொள்ளும். இப்படியே தீய செயல்களில்

ஈடுபடும் ஐம்பொறிகளுக்கும் இறைவனது தொடர்புடைய வேலைகளைக் கொடுத்தால் அவை அவற்றில் ஈடுபட ஈடுபட மற்றவற்றின் தொடர்பு குறையும்; மனமும் கெட்ட வாசனை குறைந்து பின்பு அறவே நீங்கி இறைவனது நினைவிலே நிற்கும்.

இதற்காகத்தான் ஆன்றோர்கள் இறைவனுடைய திருவருளையே துணையாகக் கொண்டு, இறைவன் தன் கருணையாற் காட்டிய உருவங்களைக் கண்டு, மற்றவர்களுக்கும் அவற்றை வெளிப்படுத்தினார்கள். அந்த உருவங்களுக்குப் பூசை முதலியன இயற்றும் முறைகளை விரிவாக அமைத்துத் தந்தார்கள். பல தலங்களில் பல மூர்த்திகளை தாபித்தார்கள். பல தீர்த்தங்களை அமைத்தார்கள். பல காலம் உலகில் வாழப் பிறந்த மக்கள் தம் வாழ்நாளில் மூர்த்தி, தலம், தீர்த்தங்களைத் தரிசித்துப் பயன் கொள்ளத் தொடங்கினால் அந்த வகையில் நெடுங்காலம் செல்லும். ஐம்பொறிகளுக்கும் உரிய அநுபவங்களில் பெரும்பாலானவை இறைவனுடைய தொடர்புடையனவாகவே இருக்கும்.

கண்ணாலே அழகிய காட்சிகளைக் காண வேண்டும் என்ற அவா இருப்பது மனித இயல்பு. திருக்கோயில்களில் கண்ணுக்கினிய சிற்பக் காட்சிகளையும் மலர் நிறைந்த நந்தவனங்களையும், விக்கிரகங்களையும் திருவுலாக் காட்சிகளையும், பரத நாட்டியங்களையும் கண்டு களிக்கலாம். இனிய இசைப்பாடல்களைக் கேட்டுக் களிக்கலாம். அறுசுவை உண்டிகளையும் இறைவனுக்கு நிவேதனம் செய்து நுகரலாம். இனிய நீரில் ஆடித் தண்ணிய தென்றல் வீச இன்புறலாம். நறுமலர், தூபம் ஆகியவற்றின் மணத்தைத் துய்க்கலாம். இப்படி ஐம்பொறிகளின் நுகர்ச்சிகளும் இறைவனோடு தொடர்புடையனவாகவே இருப்பதால் மனமும் இறைவனோடு சார்ந்த எண்ணங்களையே பெரும்பாலும் எண்ணும். அதனால் தீய எண்ணங்களுக்கு இடமில்லாமல் ஒழியும். இத்தகைய நல்ல பயனைக் கருதியே தமிழ் நாட்டில் மூர்த்தி, தலம். தீர்த்தங்கள் அமைந்தன.

> "மூர்த்தி, தலம். தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
> வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

என்று தாயுமானவர் பாடினார்.

திருவெண்காடு பழைய தலங்களில் ஒன்று. சோழ நாட்டில் காவிரிப்பூம் பட்டினத்தை அடுத்து விளங்குவது. வால்மீகி இராமாயணத்தில் அந்தத் தலச் செய்தி வருகின்றது. அங்கே சோம

தீர்த்தம், சூரிய தீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றை முக்குளம் என்று சொல்வார்கள். அந்தத் தீர்த்தங்கள் மிக்க புனிதமானவை. அவற்றில் மூழ்கினவர் தாம் வேண்டும் பொருள்களைப் பெறுவர் என்ற நம்பிக்கை அன்பர்கள் மனத்தில் நெடுங்காலமாக இருந்து வருகிறது.

திருஞானசம்பந்தப் பெருமான் திருவெண்காட்டுக்கு எழுந்தருளினார். தமிழ் நாட்டிலுள்ள பல ஊர்களிலிருந்தும் அடியார்கள் அங்கே வந்து இறைவனை வழிபட்டார்கள். அவர்களுடைய பக்தியையும் நம்பிக்கையையும் கண்டு இறைவன் கருணையை வியந்து மகிழ்ந்தார் சம்பந்தர். அடியார்களை அணுகி விசாரித்தார். ஒருவர் "என்னுடைய மனைவியைப் நெடுநாட்களாகப் பேய் பிடித்திருந்தது. ஒரு பெரியவர் வெண்காட்டு முக்குளத்தில் ஒரு மண்டலம் நீராடிச் சுவேதாரணியேசுவரரையும் பிரம்ம வித்தியா நாயகியையும் வழிபட்டால் இந்தத் துன்பம் தீரும் என்று சொன்னார். அவர் கூறியதை நம்பி இங்கே வந்து நீராடி வழிபட்டோம். இப்போது என் மனைவிக்கு யாதொரு குறையும் இல்லை. பழைய தொல்லை நீங்கியது. நாற்பத்தெட்டு நாள் இருக்க வேண்டும் என்ற சங்கற்பம் இருப்பதனால், பேய்த்தொல்லை நீங்கினாலும் நாங்கள் இங்கே இருந்து வருகிறோம். அதன் பயனை இப்போது உணர்ந்தோம். தேவரீரைத் தரிசிக்கும் பேறு கிடைத்தது" என்று சொல்லி அவரும் அவர் மனைவியும் சம்பந்தப் பெருமான் திருவடியில் வீழ்ந்து பணிந்தனர். வேறு சில மகளிர் பேயாடுவதையும் அப்பெருமான் பார்த்தார்.

"மற்றோர் அன்பர் வந்தார். உங்கள் குறை என்ன? அது நிறைவேறிவிட்டதா? நிறைவேறப் போகிறதா?" என்று கேட்டார், அந்த அன்பர் பெருஞ்செல்வர் அந்தச் செல்வத்தைத் தமக்குப் பின் அநுபவிக்கப் பிள்ளையின்றி வருந்தினார். தானமும் தவமும் புரிந்தார். கடைசியில் திருவெண்காட்டுக்கு வந்து முக்குள நீரில் தம் மனைவியுடன் மூழ்கிச் சில காலம் அந்தத் தலத்தில் இருந்தார். ஊர் சென்ற ஓராண்டில் அவருக்குக் குழந்தை பிறந்தது. அந்த ஆண்குழந்தைக்கு இப்போது ஓராண்டு நிரம்பி விட்டது. குழந்தைக்கு வெண்காடன் என்று பெயர். அக்குழந்தையையும் எடுத்துக் கொண்டு இப்போது தரிசனத்துக்காக வந்திருக்கிறார்,

இந்தச் செய்தியைக் கேட்டார் சம்பந்தர். அந்தக் குழந்தைக்கு ஆசி கூறினார். அந்தத் தம்பதிகளை வாழ்த்தினார்,

அடுத்தபடி ஓரன்பர் வந்தார். தமக்கு நெடுநாட்களாக இருந்த நோய் முக்குளநீரில் ஆடியதால் போயிற்று என்று சொன்னார். மற்றொருவர் தம் மகளுக்கு ஏற்ற வரன் கிடைக்காமல் திண்டாடி இறுதியில் இங்கே வந்து முக்குளத்தில் ஆடிய பிறகு சிறந்த மாப்பிள்ளையைப் பெற்றதாகக் கூறினார். வறுமை நீங்கிச் செல்வம் பெற்றாரும், சண்டை நீங்கி அமைதி அடைந்தாரும், காணமற் போன உறவினரை மீட்டும் காணப் பெற்றாரும், தாம் வேண்டிய கல்வித் துறையில் புலமை பெற்றாரும், பெற எண்ணி வழிபடுவாருமாகப் பலரைச் சம்பந்தர் கண்டார். இறைவன் கருணையை நினைந்து நினைந்து இன்புற்றார். பாவம் போக்கி நினைத்தவற்றையெல்லாம் தரும் முக்குளத்தையும், திருவெண்காட்டு அப்பனையும் கண்டு கண்டு உருகினார். தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தாம் பாடிய பதிகத்தில் இணைத்து மொழிந்தார்.

பேயடையாய் பிரிவு எய்தும்; பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர்; ஐயுற வேண் டாஒன்றும்;
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.(2.48.2)

(மூங்கிலைப் போன்ற வழுவழுப்பும் பசுமை நிறமும் உள்ள தோளைப் பெற்ற உமாதேவியைத் தன் பங்கிலே வைத்தருளும் இறைவனுக்குரிய திருத்தலமாகிய திருவெண்காட்டில் உள்ள முக்குள நீரில் தோய்ந்து ஆடும் செயல் உடையாரைத் தீய செயல்கள் சாரா; அவர்களைப் பேய்கள் அடையா; முன்பே அடைந்திருந்தால் பிரிந்து நீங்கிவிடும். பிள்ளை வேண்டு மென்றால் அதனையும், அதனோடு மனத்தில் வேறு எவற்றை நினைந்தார்களோ அவற்றையும் பெறுவார். இவற்றை அடைவது பற்றிச் சிறிதளவும் ஐயுற வேண்டாம்.

பேய் பலவகையாதலின் அடையா என்று பன்மையினாற் சொன்னார். பிரிவெய்தும் என்றது, முன்பு அடைந்தவற்றை நினைந்து உள்ளம் நினைந்தனவாகிய வரங்கள். ஒன்றும் – சிறிதளவும், வேய் – மூங்கில், முக்குளம் – சோம சூரியாக்கினி தீர்த்தங்கள். தோய்தல் – நீராடுதல், வினை– செயல், வினையாராகிய அவர் தம்மை. தோயா – சாரா, தீவினை–தீய செயல், பாவமும் ஆம்.)

இறைவனுடைய நினைவோடு நீராடித் தொழுபவர்களிடத்தே தீய வினை தோயா என்று சம்பந்தர் சொல்வது நினைவு கொள்வதற்குரியது. சூழ்நிலையினாலும் பழக்கத்தாலும் பழைய வாசனை மாறி நல்ல செயல்களிலே ஈடுபடுவார்கள் என்று கூறுகிறார்.

இப்பாட்டோடு தொர்புடைய வரலாறு ஒன்றுண்டு. அது வருமாறு:

நடுநாட்டில் பெண்ணாகடம் என்ற தலத்தில் ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்கு முன் அச்சுதகளப்பாளர் என்ற வேளாளர் ஒருவர் இருந்தார்; சைவ சமயத்தினர். அவருக்கு நெடுங்காலம் மக்கட் பேறே இல்லை. அதனால் மிக்க வருத்தத்தை அடைந்த அவர் பலவகையான பரிகாரங்களைச் செய்ய எண்ணினார். தம்முடைய குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் போய், தம் குறை நீங்க என்ன செய்யலாம் என்று கேட்டார். அவர் உடனே தம்முடைய பாரயணத்தில் உள்ள தேவாரத்தை எடுத்துக் கயிறு சாத்திப் பார்த்தார். பார்த்த இடத்தில், "பேயடையாய் பிரிவெய்தும்" என்ற இந்தப் பாசுரம் கிடைத்தது. இதில் "பிள்ளையினோடு உள்ள நினை வாயினவே வரம்பெறுவர்"என்று இருப்பதைக் கண்டார். அச்சுதகளப்பாளருடைய குறை பிள்ளை இல்லை என்பதுதானே? அவர் குறைக்குப் பரிகாரம் சொல்வது போலப் பாட்டு அமைந்திருந்தது கண்டு சகலாகமபண்டிதர் இறைவன் திருவருளை எண்ணி அதிசயித்து, திருவெண்காட்டுக்குச் சென்று முக்குள நீரில் மூழ்கி வழிபட்டுக் கொண்டு சிலகாலம் இருக்கும்படி களப்பாளரைப் பணித்தார். அவர் அவ்வாறே செய்து ஊர் திரும்பினார்,

அது தொடங்கியே அவர் மனைவி கருவுற்று ஓர் ஆண் குழந்தையை ஈன்றாள். திருவெண்காட்டு மூர்த்தியை வழிபட்டதன் பயனாகப் பிறந்த குழந்தையாதலின் அதற்குச் சுவேதவனப்பெருமாள் என்ற திருநாமம் சூட்டி வளர்த்து வந்தார்கள். அந்தக் குழந்தையே பின்பு "சிவஞானபோதம்" என்னும் சைவ சாத்திர நூலை இயற்றிச் சந்தானாச்சாரியார்களில் முதல்வராகத் திகழ்ந்த மெய்கண்டார். சைவசித்தாந்த சாத்திரங்கள் யாவற்றிற்கும் மூலம் சிவஞானபோதம். அது பிறக்கக் காரண மூர்த்தியாக இருந்தவர் மெய்கண்டார். அவர் திருஅவதாரம் செய்ய உறுதுணையாக இருந்தது, "பேயடையா" என்ற இந்தத் தேவாரப் பாசுரம்.

திருச்சிற்றம்பலம்



# திருமூலரும் திருஞானசம்பந்தரும்

சித்தாந்த கலாநிதி, சித்தாந்த செம்மணி, சைவநன்மணி,
சித்தாந்த சாகரம், சித்தாந்த வித்தகி, சிவஞானவாரிதி
முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி,
அன்புநெறி சிறப்பாசிரியர்

திருமூலர் அருளிச்செய்த திருமந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக விளங்குகின்றது. திருஞானசம்பந்தர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாக விளங்குகின்றன. திருமந்திரம் மூவாயிரம் என்று கூறப்பட்டாலும் இப்போது நமக்கு கிடைத்துள்ள பதிப்பிலுள்ள பாடல்கள் 3108 ஆகும். திருமுறைகண்ட புராணப்படி திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் பதினாறாயிரம் ஆயினும் இப்போது நமக்குக் கிடைத்துள்ள பதிகங்கள் 384. அவற்றின் பாடல்கள் 4181. திருமந்திரம் ஒன்பது ஆகமங்களின் கருத்தை ஒன்பது தந்திரங்களில் விளக்குகின்றது. அந்நூல் தோத்திரநூல் வரிசையில் சேர்க்கப்பட்டிருந்தாலும் அதில் சொல்லப்படாத சித்தாந்தக் கருத்துக்களே இல்லை எனலாம். திருஞானசம்பந்தர் தேவாரம் பண்களின் அடிப்படையில் மூன்று திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. பாடல்கள் திருஞானசம்பந்தரின் அருளனுபவத்தை விளக்குவன. எல்லாப் பாடல்களிலும் முதல் இரண்டு அடிகள் சிவனைப் பற்றிய வருணனைகளாகவும் பின்னிரண்டு அடிகள் இறைவன் எழுந்தருளியுள்ள தல வருணனைகளாகவும் அமைந்துள்ளன. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பல இலைமறை காய் போல் பாடல் தோறும் காணப்பட்டாலும் சில குறிப்பிட்ட பதிகங்கள் குறிப்பிட்ட சித்தாந்தக் கருத்தை விளக்குவனவாக அமைந்துள்ளதையும் காணலாம். திருஞானசம்பந்தர் தம் பாடல்களில் திருமூலரைப் போற்றியிருப்பதால் அவர் சம்பந்தரின் காலத்திற்கு முற்பட்டவர் என்பது தெளிவு. இவ்விருவர் தம் பாடல்களிலுள்ள சில ஒப்புமைப் பகுதிகள் இக்கட்டுரையில் காட்டப்படுகின்றன.

## இறைவன் அநாதி

சைவசித்தாந்தம் கூறும் பொருட்கள் மூன்றாகும். அவை 1. தானே அறியும் பொருளான பதி. 2. அறிவிக்க அறியும் பொருளான பசு. 3. அறிவித்தாலும் அறியாத பொருளான பாசம். அது ஆணவம், கன்மம், மாயை இவற்றினைக் குறிக்கும். முப்பொருட்களும் அநாதி என்பது சைவசித்தாந்தக் கோட்பாடு.

இவற்றுள் மேலான பொருள் பதியே. அவன் முன்னைப் பழமைக்கும் பழமையானவன். அவனுக்குத் தோற்றமும் அழிவும் கிடையாதாகையால் அநாதி எனப்படுவான். அவனுக்குப் பிறப்பு கிடையாது என்பதை, திருமூலர் 'பிறப்பிலி நாதனை' (திருமந்திரம் 86) என்று குறிப்பிடுவது போல திருஞானசம்பந்தரும் அவனைப் 'பிறப்பில் பெருமானே' (1:80:2) என்று போற்றுகின்றார்.

## உருவின்றியே உருவன் கருவின்றியே கருவன்

இறைவன் தனக்கென ஒரு குறிப்பிட்ட வடிவம் இல்லாதவன். அவன் விருப்பு வெறுப்பு இல்லாதவனாதலாலும், அளவில் ஆற்றலுடையவனாதலாலும் உயிர்களின் பொருட்டு உயிர்களிடம் கொண்ட கருணையினால் அவர்களின் பக்குவத்திற்கேற்பப் பலவித வடிவம் கொள்ளும் வல்லமையுடையவன். மாயா காரிய வடிவமில்லாமல் அருட்டிருமேனி கொண்டுள்ள இறைவன் உயிர்கள் செய்த வினைப் பலன்களைத் துய்ப்பிக்கும் பொருட்டு அவற்றிற்கு மாயா காரிய உருவைக் கூட்டுவிப்பன். கருவயப்பட்டுப் பிறவாத அவன் உயிர்கள் வினைப்பயனைத் துய்ப்பிக்கும் பொருட்டுக் கருவயப்பட்டுப் பிறக்கும் படிச் செய்வன். இக்கருத்தை உள்ளடக்கித் திருமூலர்

'உருவன்றி யேநின் றுருவம் புணர்க்கும்
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்'

என்று குறிப்பிடுகின்றார் (திருமந்திரம்–2840)
இங்கு

'கருவினா லன்றியே கருவெலாம் ஆயவன்
உருவினாலன்றியே உருவு செய்தானிடம்' (3:35:3)

என்ற திருஞானசம்பந்தர் பாடலடிகள் ஒப்பு நோக்கத்தக்கன.

## உண்பது பிச்சை

எல்லாம் வல்ல எம்பிரான் வசிப்பது சுடுகாடு. உண்பது பிச்சை என்று,

'உறைவது காட்டகம் உண்பது பிச்சை' (திருமந்திரம் 1616)

என்று நம்பிரான் திருமூலர் குறிப்பிடுவது போல தம்பிரான் சம்பந்தரும்,

'உண்பது ஊரிடு பிச்சை' (1:39:2)

என்று சிவனின் பிச்சாடனக் கோலத்தைப் பாடுகின்றார்.

**அந்தமும் ஆதியுமானவன்**

தனக்கெனத் தோற்றமும், அழிவுமில்லாத சிவபெருமான் உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணனாக விளங்குகின்றான். இதனை,

'அந்தமும் ஆதியும் ஆகும் பராபரன்' (திருமந்திரம்–2594)

என்று திருமூலர் குறிப்பிடுவது போல,

'அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணலார்'

என்று திருஞானசம்பந்தர் இறைவனைப் போற்றுகின்றார்.

'அந்தம் ஆதி என்மனார் புலவர்' (சிஞானபோதம், சூத்–1)

என்று மெய்கண்டதேவர் கூறுவது இங்குச் சிந்திக்கத் தக்கது.

**உலகரூபி**

இறைவனை வேதம், விசுவரூபி என்று குறிப்பிடும். விசுவம் என்றால் உலகம். இறைவன் உலகப் பொருட்களில் கலப்பால் ஒன்றாகி நிற்கும் நிலையை,

'தானே இருநிலந் தாங்கி விண்ணாய் நிற்கும்
தானே சுடும் அங்கி ஞாயிறு திங்களும்
தானே மழை பொழி தையலுமாய் நிற்கும்
தானே தடவரை தண்கடலாமே' (திருமந்திரம்–10)

என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இறைவன் இவ்வாறு நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், ஞாயிறு, திங்கள் ஆகிய உலகப் பொருள்களோடும், உயிர்களோடும் பிரிவின்றி ஒன்றாய்க் கலந்து நிற்கும் நிலையை,

'மண்ணும் புனலும் உயிரும் வருகாற்றும் சுடர் மூன்றும்
விண்ணும் முழுதானான் இடம் வீழிம்மிழலையே' (1:11:4)

என்று ஞானசம்பந்தர் போற்றுகின்றார்.

**தாயினும் நல்லன்**

சேயினிடத்துக் கைம்மாறு கருதாது அன்பு செலுத்துபவள் தாய்; பசியறிந்து பாலூட்டுபவள் தாய். நோயால் வருந்தும் பச்சிளம் சிறார் மருந்து புகட்டின் அதன் பசுங்குடர் பொறாது என்று தான் மருந்து உண்டு, அதன் சக்தியைப் பால் மூலம் குழந்தைகளுக்குப் புகட்டுபவள் தாய். அன்புடன் சேயைப் பேணிப் போற்றுந் திறத்தில்

பெற்றதாயினும் பேரன்புடையவர் பிறர் யாருமில்லை. பெற்ற தாயின் அன்பைக் காட்டிலும் உயிர்களிடத்து பேரன்புடையவனாய் இன்னருள் புரிபவன் இறைவன் ஒருவர் என்பதை 'தாயினும் நல்லவன்' (திருமந்திரம் – 8) எனப் போற்றுகின்றார் திருமூலர். திருஞானசம்பந்தரும் இறைவனைத் 'தாயினும் நல்ல தலைவன்' (3:123:5) என்று போற்றுவது இங்கு நோக்கத் தக்கது.

## ஒப்பற்றவன்

இறைவன் அண்டங்களெல்லாம் அணுக்கள் என்று சொல்லும் அவ்வளவு பருமையானவன். அதாவது அவன் யாண்டு வியாபித்திருப்பவன். பிரிக்கவே முடியாத மிகச்சிறு துகளானஅவன் அண்டம் என்று சொல்லும்படி நுட்பமானவன். அதாவது அவன் உயிர்க்குள் உயிராய் விளங்கும் நுண்ணியன். பேரருளாளன், அவனையன்றி எவ்வுயிரும் வீடுபேறு அடைதல் முடியாது. எனவே அவன் ஒப்பற்றவன். இதனை,

'பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மை யான்' (திருவருட்பயன் – 3)

என்று உமாபதிசிவம் கூறுவார். இதற்கு முன்னோடியாக அவனது ஒப்பற்ற தன்மையைத் திருமூலர்,

'தன்னை யொப்பா யொன்றும் இல்லாத் தலைமகன்' (திருமந்திரம் – 7)

எனப் போற்றுகின்றார். இதற்கொப்பாகத் திருஞானசம்பந்தரும் 'தன்னேர் பிறரிலானை' என்று இறைவனைப் போற்றுகின்றார்.

## இறைவனின் பெருமை அளத்தற்கரியது

பரந்த கடல் மக்கள் குளிக்க இடம் தருகின்றது. ஆனால் கடலுள் குளிக்கும் மக்களால் கடலின் பரப்பையும், ஆழத்தையும் அறிய இயலாது. அதுபோல் இறைவனின் அருள் வெள்ளத்தில் இருக்கும் உயிர்களால் உருவம், பெயர், குணம்,தொழில் ஒன்றுமில்லாத இறைவனின் சொரூப இயல்பை அறிந்து கொள்ளுவது கடினம்.

'ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை' (திருமந்திரம் 95)

என்று திருமூலர் கூறுவது போல் திருஞானசம்பந்தரும்,

'ஆரறி வாரவர் பெற்றியே' (3:312:2)

'தன்மை யாரு மறிவாரிலை' (3:142:2)

'இவர் தன்மை யறிவாரார்' (3:370:1 – 10)

என்று குறிப்பிடுகின்றார்.

'கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
கடல் அளக்க வாராதாற் போலப் - படியில்
அருத்தி செய்த அன்பரை வந்து ஆண்டதுவும் எல்லாம்
கருத்துக்குச் சேயனாய்க் காண்' (திருகளிற்றுப்படியார் - 90)

என்று திருகளிற்றுப்படியார் பாடலட இக்கருத்தைத் தழுவியதேயாம்.

**சிவதன்மம் உரைத்தது**

சிவபெருமான் உலகோர் உய்யும் பொருட்டு சிவதன்மம் உரைத்ததை,

'தரனாய்ச்சிவதன்மந்தானேசொல்காலத்
தரனாய்'(திருமந்திரம் - 61)

என்று திருமூலர் கூறுவதற்கு ஒப்பாகத் திருஞானசம்பந்தரும்

'அறங்கொண்டுசிவதன்மம் உரைத்தபிரான்' (2:43:6)

என்று இறைவனைப் போற்றுகின்றார்.

**சார்ந்தவர்கட்கு இன்பம் தருதல்**

ஒருவன் குளிரால் நடுங்குகின்றான. அருகே சற்று தூரத்தில் தீ எரிகின்றது. அருகில் செல்வோர்க்குத் தீ நடுக்கத்தைப் போக்கும். விலகி நின்றார்க்குப் பயன் தராது. அதுபோல இறைவன் அன்பால் தன்னை அகலாது இடையறாது நினைப்பவர்கட்கு நலம் புரிவான். தன்னை நினையாது விலகி ஒழுகுவார்க்கு இன்னாப் பிறவி கொடுப்பான் என்பதை,

'சார்ந்தர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்
பேர்ந்தவர்க்கின்னாப் பிறவிகொடுத்திடும்' (திருமந்திரம் - 2081..)


என்று திருமூலர் கூறுவதற்கு ஒப்பாகத் திருஞானசம்பந்தரும்,

'சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும் வண்ணம்
நேர்ந்தவன்' (1:113:5) எனவும்
'தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானை' (2:4:11)

என்றும் கூறுகின்றார்.

'நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்' (திருவருட்பயன் - 9) என்று உமாபதிசிவம் கூறுவதும் இங்கு நினைவு கூர்தற்குரியது.

- - - - -



உ
சிவமயம்

# இப்படி அல்லவோ தோழர்கள் இருத்தல் வேண்டும்.

கவிஞர் நா. மகேசன் சிட்னி, அவுஸ்திரேலியா
அன்புநெறி சிறப்பு ஆசிரியர்

"அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வால்லார்நட் பாய்ந்து கொளல்."

திருவள்ளுவப் பெருந்தகையாரின் நட்பாராய்தல் அதிகாரத்தின் 795 வது திருக்குறள் இது. குற்றத்தை எடுத்துக் காட்டி இடித்துரைத்து, பேசி நியா வாதம் செய்து அறிவுறுத்த வல்லவர்களுடைய நட்பை நிச்சயமாக்கிக் கொள்ள வேண்டும். என்பது இதன் பொருள்.

நல்ல நட்பை ஆராய்ந்து அந்த நட்பினால் வருவது தோழமை. அழச் சொல்லி அல்லவை கடிகின்ற தோழர்களை நாம் இக்காலத்தில் காண்பது அரிது. ஒரு சிலரைத் தவிர பெரும் பாலானோருடைய நட்பும் தோழமையும் ஏனோ, தானோ என்ற அளவில்தான். ஆனால் எமக்கு முன்மாதிரியாக இருப்பது "எம்பிரான் தோழர்" என்று அழைக்கப்படுகின்ற சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் சிவபெருமானுக்கும் இடையில் இருந்த தோழமை, வள்ளுவருடைய தோழமைக்கு உவமையாகும்.

சுந்தரர் சிவபெருமானிடத்தில் வைத்த அன்புக்கு அளவேயில்லை. இருந்தாலும் பெருமான் அவரை அழவைத்த இடங்கள் பல. திருமணம் செய்யப் போனபோது இடித்துரைத்தார், வழக்கிட்டார். திருவாரூரில் பரவையாரோடு இல்லறம் மேற்கொண்டு இருந்த போது, திரு ஒற்றியூரிலே சங்கிலியாரைப் பிரியேன் என்று சத்தியம் செய்து கொடுத்தபின் அதை மீற எத்தனித்த போது கண்பார்வையை இழக்கச் செய்தார். இப்படிப் பல துன்பங்களைக் கொடுத்த இறைவர் அவருக்குச் செய்த நன்மைகளும் பலப்பல. சங்கிலியாருடைய திருமணத்துக்கு எத்தனை அருட்செயல்களைச் செய்தார். ஊன்றுகோல் கொடுத்தார், கண்பார்வை கொடுத்தார். போதாக் குறைக்கு பரவை நாச்சியாரையும் ஊடல் நீக்கிச் சேர்த்து வைத்தார். பொன் கொடுத்தார். பொதி சோறு கொடுத்தார். இத்தனையும் பெற்றதால் அன்றோ சுந்தரருடைய தோழமை சொல்லரிய மேன்மை உள்ளதாக


இருக்கிறது. அதனால் அன்றோ சுந்தரர் சிவபெருமானைப் ஏத்தி ஏத்திப் பாடினார். பெருமானை மறக்க முடியாது என்று திருவாரூரிலே பாடினார்.

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானை
பிழையெலாந் தவிரப்பணிப்பானை
இன்னதன்மையன் என்றறி வொண்ணா
எம்மானை எளிவந்தபிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்தணி
ஆரூ ரானை மறக்கலுமாமே.

எனக்குப் பொன்னையும், பொருளையும், மெய்ப்பொருளையும், வழங்குபவனும், அவை வாயிலாக உலகின்பத்தையும் சேர்ப்பிக்கின்றவனும் நீயே. அப்படி நான் உலக இன்பங்களை அனுபவிக்கின்ற போது விடுகின்ற பிழைகளையும் பொறுத்துக் கொள்பவனும் நீயே. பின்னர் பிழைகள் வராதவாறு முன்கூட்டியே தடுத்துக் கட்டளை இடுபவனும் நீயே. உன்னுடைய விசாலமான தன்மைகளை அளந்து சொல்ல முடியாதவனும் நீயே. ஆனால் எனக்கு இலகுவாக அருளியவனும் நீயே. அன்னங்கள் தங்கியுள்ள வயல்களும் பண்ணைகளும் நிறைந்துள்ள ஆரூரின் பெருமானே! அடியேன் உன்னையும் உனது அருட் செயல்களையும் மறக்கமுடியுமா? மறக்கமுடியாது.

சுந்தரமூர்த்தி நாயனாருடைய வாழ்க்கை இன்றும் எமக்கு வழிகாட்டியாக அமையவேண்டும். அவர் இரண்டு பெண்களை மணந்தார் என்பதை நாம் பிழையாக விளங்கிக்கொள்ளக் கூடாது. அவர்களுடைய அந்த வாழ்க்கை இறை பக்தியோடு அமைந்த தெய்வத் தன்மை கொண்ட வாழ்க்கை. சிவனடியாரைப் பேணவேண்டும் என்ற நோக்கம் உடைய வாழ்க்கை. சாதாரண நம் போன்றாரின் இல்வாழ்கை அல்ல.

பிழைவிடுவது மனித இயல்பு. ஆனால் திருத்திக் கொண்டு அன்புநெறியில் வாழவேண்டும் என்பதை எமக்குச் சொல்வதே சுந்தரரின் வாழ்க்கை.



# திருவாசகத்திற் கையாளப்பட்டுள்ள பாவினங்கள்

கவிஞர் வி. கந்தவனம், கனடா சைவ சித்தாந்த
மன்றக் காப்பாளர்களில் ஒருவர்,
'அன்புநெறி' சிறப்பாசிரியர்

திருவாசகம் பலவிதமான பாவினங்களாற் பாடப்பெற்றுள்ளது. மணிவாசகப் பெருமான் தமிழர் செய்யுள் மரபையும் அவற்றைக் கையாளத் தக்க இலக்கண அறிவையும் நன்கு அறிந்திருந்தார் என்பதற்குத் திருவாசகச் செய்யுள்களே சான்றாகவுள்ளன.

முதலாவது பாடல் சிவபுராணம். இது 95 அடிகளைக் கொண்ட கலிவெண்பாவிற் செய்யப் பெற்றுள்ளது. கலி வெண்பாவிலும் நேரிசைக் கலிவெண்பா, இன்னிசைக் கலிவெண்பா என இருவகையுண்டு. சிவபுராணம் இன்னிசைக் கலிவெண்பா வகையைச் சேர்ந்தது.

கீர்த்தித் திருவகவல் பெயருக்கேற்ப அகவலிற் பாடப் பட்டுள்ளது. செய்யுள் இலக்கணத்தில் அகவலை ஆசிரிப்பா என்றும் அழைப்பர். ஆசிரியப்பாவும் பலவகைப்படும். இப்பாடல் நிலைமண்டில ஆசிரியப் பாவாகும். இது,

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயில் எல்லாம் பயின்றனன் ஆகி

என்பது போன்று இரண்டு அடிகளுக்கு ஓர் எதுகைபெற்று வரும். இவ்விதமே திருவண்டப் பகுதி, போற்றித் திருஅகவல் ஆகிய பகுதிகளும் அகவலிற் பாடப்பெற்றுள்ளன.

திருச்சதகம் வித்தியாசமானது. சதகம் என்றால் 100 பாடல்களைக் கொண்டது என்பது பொருள். இவை கட்டளைக் கலித்துறை, தரவுக் கொச்சகக் கலிப்பா, விருத்தப் பாவகைகள், கலிநிலைத்துறை போன்ற பாவகைகளால் ஆக்கப் பெற்றுள்ளன.

நீத்தல் விண்ணப்பம் 50 செய்யுள்களைக் கொண்டது. ஒவ்வொன்றும் கட்டளைக் கலித்துறையில் அமைந்துள்ளன. தொடர்ந்துவரும் பாடல்களும் அவற்றின் பாவினங்களும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| திருவெம்பாவை | – | வெண்டளையால் வந்த இயற்றர விணைக் கொச்சகக் கலிப்பா. |
| அம்மானை | – | ஆறடித் தரவுக் கொச்சகக் கலிப்பா. |
| திருப்பொற் சுண்ணம் | – | அறுசீரடி ஆசிரிய விருத்தம். |
| திருக்கோத் தும்பி | – | நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா. |
| திருத்தெள்ளேணம் | – | நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா. |
| திருச்சாழல்,திருப்பூவல்லி | – | நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா. |
| திருவுந்தியார் | – | கலித்தாழிசை. |
| திருத்தோள்நோக்கம் | – | நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா. |
| திருப்பொன்னூசல் | – | ஆறடித் தரவுக் கொச்சகக் கலிப்பா. |
| அன்னைப் பத்து | — | கலி விருத்தம். |
| குயிற் பத்து | — | ஆசிரிய விருத்தம் |
| திருத்தசாங்கம் | – | நேரிசை வெண்பா |

திருப்பள்ளியெழுச்சி, கோயில் மூத்த திருப்பதிகம், செத்திலாப் பத்து ஆகியவை ஆசிரிய விருத்தம்.

அடைக்கலப் பத்து — கலவை விருத்தம்.

ஆசைப் பத்து, அதிசயப் பத்து, புணர்ச்சிப் பத்து, வாழாப் பத்து, அருட் பத்து, திருக்கழுக்குன்றப் பதிகம் ஆகிய ஆசிரிய விருத்தப் பாக்களில் அமைந்துள்ளன.

கண்ட பத்து — கொச்சகக் கலிப்பா.

பிரார்த்தனைப் பத்தும் குழைத்த பத்தும் ஆசிரிய விருத்தங்கள். உயிருண்ணிப் பத்து — கலி விருத்தம்.

அச்சப் பத்து — ஆசிரிய விருத்தம்.

திருப்பாண்டிப் பதிகம் – கட்டளைக் கலித்துறை.

திருவேசறவு, திருப்புலம்பல், குலாப் பத்து ஆகியன கொச்சகக் கலிப்பாவகையிற் பாடப்பட்டுள்ளன.

அற்புதப் பத்து, சென்னிப் பத்து, திருவார்த்தை, எண்ணப் பதிகம், யாத்திரைப் பத்து ஆகியன ஆசிரிய விருத்த வகையைச் சேர்ந்தவை.

திருப்படையெழுச்சி — கலி விருத்தம்.

திருவெண்பாவும் பண்டாய நான்மறையும் நேரிசை வெண்பாக்கள்.

திருப்படையாட்சியும் ஆனந்த மாலையும் ஆசிரிய விருத்தம். அச்சோப் பதிகம் – கலி விருத்தம்.

தமிழ்ச் செய்யுள் வகையில் கட்டளைக் கலித்துறையும் வெண்பாவும் பாடுவதற்கு நிரம்பிய புலமையும் பயிற்சியும் வேண்டும். மணிவாசகப் பெருமான் இவ்விரு பா வகைகளையும் மிக அருமையாகவே கையாண்டிருப்பது தமிழ் இலக்கணத்தில் அவருக்கு இருந்த அறிவையே காட்டுகின்றது.


மூவர் முதலிகள் வெண்பாவகை பாடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. மணிவாசகப் பெருமான் எல்லாவகைச் செய்யுள்களையும் கையாண்டிருப்பது அவரது யாப்பிலக்கணப் புலமையைக் காட்டுகின்றது. 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்று திருத்தொண்டத் தொகையிலே சுந்தரமூர்த்தியார் பாடியிருப்பது மணிவாசகரைத் தாமோ என்று சிந்திக்கவும் வைக்கின்றது.

-----

**மன்றத்தில் நிகழ்ந்தவை**

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

மாணிக்கவாசர் குருபூசை யூலை 8, 2016 வெள்ளிக்கிழமை மிசிசாகா யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. வழிபாடு மாலை 7:00 மணிக்கு ஆரம்பித்தது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் இடம் பெற்றன. தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகள் பற்றி மாணவர்கள் வகுப்பு ரீதியாகத் தங்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைகளையும், பாடல்களையும் ஆயத்தப்படுத்திச் சிறப்பாகச் செய்தார்கள். இறுதி வழிபாட்டுடன் குருபூசை நிறைவு பெற்றது. இரவு உணவும் வழங்கப் பெற்றது. இக்குருபூசையினை திரு. விசுவலிங்கம் குடும்பத்தினர் உபயமாக எடுத்துச் செய்தனர்.



# ஆடும் பெருமானின் கேள்வியும் அப்பரடிகளின் பதிலும்

சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம்
'அன்புநெறி' சிறப்பாசிரியர், மன்றக் காப்பாளர்

இறைவழி நின்ற அருளாளர் பலரும் உலக வாழ்வை விரும்பிக் கேட்டதில்லை. இறை நிலையையும் இறை வாழ்வையுமே விரும்பினர். மண்ணுலகை விட வானுலகுக்கு முக்கியம் கொடுத்தனர். திருவள்ளுவர் கூட *'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்'* எனக் கூறி வானுலகிற்கு மேலான இடத்தைக் கொடுக்கிறார்.

சிவ தொண்டில் சிந்தை மகிழ்ந்த அப்பரடிகள், இந்த உலகில் மனிதப் பிறவியை வேண்டுகிறார். ஆடும் பெருமானின் அழகிய திருவடிவத்தையும் தூக்கிய திருவடியையும் காண்பதற்காக இதனை வேண்டிப் பெறலாம் என்பது அவரின் கருத்து.

'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மானிலத்தே'.

அவனின் ஆடலைக் கண்டு களிக்க எத்தனை பேர், எத்தனை காலமாக, வருகிறார்கள்! ஆதியில் பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாதரும் (புலிக்கால் முனிவர்) இன்னும் பலரும் வந்தனர். சைவ நாயன்மார்கள் வந்து பாடித் தொழுதனர். *'அறவா, நீ ஆடும் போது உன் அடிக்கீழ் இருந்து ஆனந்தம் அனுபவிக்க வேண்டும்'* என்று காரைக்கால் அம்மையார் வேண்டினார். அன்று முதல் இன்று வரை அருளாளரும் ஞானிகளும் ஆடும் கூத்தனின் நடனத்தைப் பார்த்துப் பரவசம் அடைந்தார்கள்.

விஞ்ஞானிகள் கூட அவனின் ஆட்டத்தைக் கண்டு அதிசயம் கொள்கின்றனர். இயற்பியல் விஞ்ஞானியான *ஃப்றிஜிற் கப்ரா* (Frijit Capra) தனது 'Tao of Physics' என்ற நூலில் பல பட விதந்து எழுதியுள்ளார். சைவத்தின் அறிவியல் தத்துவத்துக்கும் அணுவியல் கோட்பாட்டுக்கும் இடையில் ஒரு இணைப்பைக் காண்கிறார்.

இன்று அணுத்துகள் குறித்த உலகின் மிகப் பெரிய ஆய்வுக் கூடமான *'சேர்ண்'* (CERN) நிலயத்தை ஆடும் பெருமானின் திருவுருவம் அலங்கரிக்கிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கூத்தனின் ஆட்டத்திலும் அழகிய தோற்றத்திலும் அப்பரடிகள் தன்னையிழந்து மனிதப் பிறவியை விழைந்தது வியப்பல்ல. அவனின் திருநடனத்தைக் காண்பதற்கு அவர் ஒருமுறை சிதம்பரம் சென்றார். பார்த்ததும் பரவசமடைந்தார். கூத்தப்பிரானின் ஆட்டத்திற்றான் எத்தனை அழகு! அதில் எத்தனை உணர்வலைகள் எழுகின்றன!

குனித்த புருவமும், செவ்வாயின் புன்னகையும், தூக்கிய பொற்பாதமும், திருப்பார்வையும் பிறவும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மெய் மறக்கச் செய்கின்றன. ஆடலரசனின் அபிநயத்தில் பல செய்திக் குறிப்புகள் வெளிப்படுகின்றன. எத்தனையோ கேள்விகள் எழுவதாக அப்பர் உணர்கிறார். *'நீ எங்கு வந்தாய்?'* என்று கேட்பது போலவும் இறைவனின் திருக்குறிப்பு இருக்கிறது. அப்பர் இவற்றைப் பின்வருமாறு பாடுகிறார்;

'ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவர்க்காய்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாய்எனும் எம்பெரு மான்தன் திருக்குறிப்பே'.

இறைவனின் திருக்குறிப்பைச் சொல்லும் அப்பரடிகள் வேறு சிலவற்றையும் விளக்குகிறார். *'மனம் ஒன்றி நினைந்து அவனை வழிபடுங்கள்; உங்களுக்கு எத்தகைய இன்னலும் வராது. அடியவனான மார்கண்டேயனுக்காக வெகுண்டு வந்த இயமனை அவன் முன்னர் காலால் உதைத்துக் காப்பாற்றினான். தில்லைச் சிற்றம்பலம் என்னும் சிதம்பரத்தில் அவன் நடனம் (நர்த்தனம் – நட்டம்) ஆடுகின்றான் ; அங்கே சென்று தொழுங்கள் ; அவன் எம்மையும் காப்பான்.'*, என்று விளக்கி அறிவுறுத்துகிறார்.

*'என்று வந்தாய்?'* என்னும் கேள்விக் குறிப்புடன் வேறு சில குறிப்புக்களும் ஒட்டி நிற்கின்றன. 'ஏன் வந்தாய்?', 'எதற்கு வந்தாய்?', 'இப்பதான் வந்தாயா?', போன்றவை சில. 'நீயுமா வந்தாய்?' போன்ற இகழ்ச்சிக் குறிப்பும் தெரிகிறது. இறைவன் இவற்றை எல்லாம் குறிப்பால் உணர்துவதாக எணணி நாவரசர் குழம்புகிறார். இன்பமும் துன்பமும் கலந்த உணர்வலைகள் உள்ளத்தில் பொங்கி எழுகின்றன.

மேலான பெருமக்கள் தம்மைக் குறித்து பெரிதாக எண்ணுவதில்லை; தற்பெருமை கொள்வதில்லை. தம்மைச் சிறியவராகக் கருதிப் பணிவார்கள். அது அவர்களின் பண்பு. அப்பரடிகளும் தன்னைச் சிறியவனாகக் கருதி இறைவனைப் பணிந்து பரவுவார்.

தான் பக்தனாய் நின்று பரமனைப் பாடுவதில்லை. எந்த வழியிலும் பக்தி செய்வதில்லை. மேலான இறைவனும் மேலான யோகியுமான ஈசன் தன்னை இகழ்ந்து நோக்குவதை எவ்வாறு பிழை என்பது? தன்னை இகழ வேண்டாம் என வேண்டுகிறார்.

'பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகி
எத்தினாற் பத்தி செய்கேன் என்னைநீ இகழ வேண்டா'

இங்ஙனம் வேண்டியவர், ஈசனை முத்தன் என்றும் முதல்வன் என்றும் விளிக்கிறார். முத்தி என்றால் விடுதலை. விடுதலை பெறுதலே பிறவி எடுத்ததின் பயன் என்று கருதப்படுகிறது. எதிலிருந்து விடுதலை பெறுதல் என்றால் எம்மைப் பிணித்துள்ள பாசப் பொருட்களிலிருந்து என்பது சைவம் தரும் பதில். (பாசம் – கட்டு). இயல்பாகவே எமக்குப் பல குறைகள் உள்ளன. அவற்றால் கட்டுண்டு இருக்கிறோம். இத்தைகைய குறைகள் எதுவும் இல்லாதவன் இறைவன். அதனால் அவன் முத்தன் எனப்படுகின்றான். முத்தனான சிவன் அனைத்துக்கும் மூலமாக, முதற் பொருளாக, இருக்கிறான். இதனால் அவன் முதல்வன் என்றும் அழைக்கப் படுகிறான்.

*முத்தன், முதல்வன்* என்ற பெயர்களால் சிவபிரானின் பெருமையைக் கூறி, '***என்று வந்தாய்***' என்னும் அவனின் கேள்விக்கு அப்பரடிகள் பதிலளிக்கிறார். '***அத்தா,உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே***' என்பது அவரின் பணிவும் பக்தியும் இணைந்த நேர் பதில்.

'பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகி
எத்தினாற் பத்தி செய்கேன் என்னைநீ இகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வாறே'.

அவன் ஆடுவதால் அகிலம் இயங்குகிறது. உயிர்கள் இயங்குகின்றன. அவனே எமது வாழ்வின் முதலாக இருந்து அருளுகிறான். மனம் ஒன்றி இருந்து அவனை நினைத்துத் தொழுதால் எமக்கு எத்தகைய இன்னலும் வராது. இது அப்பரடிகளின் அனுபவ வாக்கு.



# ஒன்பதாம் திருமுறை அமைப்பும் சிறப்பும்

(சித்தாந்தரத்தினம் சிவத்திரு முருகு இராமலிங்கம்,
துணைத் தலைவர், சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை)

சைவசமயத்தின் பெருமைகளை விளக்க "திருமுறைகள்" தோற்றம் கண்டன. எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருள் இன்பத்தை இவ்வையகம் பெறும்படி இறைவன் அருள் பெற்ற அருளாளர்கள் பாடியருளிய இசைத்தமிழ்ப் பாடல்கள் "திருமுறை" ஆகும்.

பரம்பொருளைப் போற்றி தமிழ் மொழியில் பல ஆயிரக்கணக்கில் எண்ணிக்கையில் அடங்காத நிலையில் பாடல்கள் அருளப் பெற்றுள்ளன.

சம்பந்த மூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரும் பாடியருளியவை பொதுவாகத் "தேவாரம்" என வழங்கி வருகிறது. சம்பந்தர் அருளியவை "திருக்கடைக்காப்பு" என்றும் திருநாவுக்கரசர் அருனியவை "தேவாரம்" என்றும், சுந்தரர் அருளியவை "திருப்பாட்டு" என்றும் சொல்வது மரபாகும். இவ் ஏழு திருமுறைகளும் சேர்ந்த தொகுப்பிற்கு "அடங்கன் முறை" என்ற பெயரும் உண்டு. இவ் ஏழு திருமுறைகளையும் நினைவில் கொண்டு ஓதக்கூடிய ஓதுவாமூர்த்தி ஒருவர் 60 ஆண்டுகளுக்கு முன் இருந்தார்கள். அப்பெரியவர் பெயர் சுந்தரமூர்த்தி என்பதாகும். திருநெல்வேலியைச் சார்ந்த இப்பெரியவரை "அடங்கன்முறை ஐயா" என்று அன்போடு யாவரும் அழைப்பார்களாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது திருவாசகம், இது எட்டாம் திருமுறை. மற்றும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய 400 அகத்துறை பாடல்கள் கொண்ட திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையில் சேரும்.

இவ் எட்டுத் திருமுறைகளுக்குப் பின்வரும் ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் ஆகும். திருமூலர் "திருமந்திரம்" பத்தாம் திருமுறை. நாற்பது பிரபந்தங்கள் பதினோராம் திருமுறையாயின, பன்னிரண்டு அருளாளர்கள் பதினோராம் திருமுறையை அருளியுள்ளார்கள். குன்றத்தூர் சேக்கிழார் சுவாமிகள் அருளியவை பெரியபுராணம் – பன்னிரண்டாம் திருமுறை.

திருஞானசம்பந்த சுவாமிகள் முதல் சேக்கிழார்சுவாமிகள் ஈறாக 27 அருளாளர்கள் அருளிய பாடல்களுக்கு "பன்னிரு திருமுறை" என்று பெயர். இப்பன்னிரு திருமுறைகளிலும் பதினெண்ணாயிரம் (18,000) எண்ணிக்கைக்கு மேலாகப் பாடல்கள் உள்ளன.

பன்னிரு திருமுறைகளில் தொகுப்பு நூல்கள் இரண்டு. அவை 9ம், 11ஆம் திருமுறைகளாகும். அதாவது பல அருளாளர்கள் அருளியவை.

ஒன்பதாம் திருமுறையினைப் பாடியவர்கள் ஒன்பதின்மர்.

1. திருமாளிகைத்தேவர்
2. சேந்தனார்
3. கருவூர்த்தேவர்
4. பூந்துருத்தி நம்பிகாடநம்பி
5. கண்டராதித்தர்
6. வேணாட்டடிகள்
7. திருவாலிய முதனார்
8. புருடோத்த நம்பி
9. சேதிராயர் .

இவ் ஒன்பதின்மர் பாடல்களுக்கு "திருவிசைப்பா" என்று பெயர். திருவிசைப்பா பாடல் பெற்ற தலங்கள் பதினான்கு. இப்பதினான்கில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஆறு. தேவாரப் பாடல் பெறாத தலங்கள் எட்டு.

திருவிசைப்பா பாடல் தலங்களில் தேவாரப் பாடல் பெற்றவை 1. கோயில் (சிதம்பரம்) 2. திருவீழிமிழலை, 3. திரு ஆவடுதுறை 4. திருப்பூவனம் 5. திருஇடைமருதூர் 6. திருஆரூர்

தேவாரப் பாடல் பெறாத தலங்கள் 1. திருவிடைக்கழி 2. களந்தை ஆதித்தேச்சரம் 3. திருகீழ்க்கோட்டூர் மணியம்பலம் 4. திருமுகத்தலை 5. திரைலோக்கிய சுந்தரம் 6. கங்கை கொண்ட சோளேச்சரம் 7. திருச் சாட்டியக்குடி 8. தஞ்சை இராசராசேச்சரம் என்பனவாகும். தேவாரப் பாடல் பெறாத இவ் எட்டும் தலங்களும் வேறு எந்தத் திருமுறைகளிலும் குறிப்பிடப் பெறவில்லை. இவற்றுள் சில பெயர்கள் புதுமையானவை. தஞ்சை இராசராசேச்சுரமும், கங்கை கொண்ட சோளேசுவரமும் வரலாற்றுப் புகழ் பெற்றவை.

திருவிசைப்பா அருளிய ஒன்பதின்மரில் திருமாளிகைத்தேவர் கருவூர்த்தேவர் ஆகிய இருவரும் புகழ் பெற்றவர்கள். இவர்கள் சித்தர்களாகவும் கருதப் பெறுகின்றனர். திருமாளிகைத்தேவருக்கு

திருவாவடுதுறை ஆதீன வளாகத்துள் கோயில் இருக்கிறது. திருமாளிகைத்தேவருக்கு வழிபாடு செய்யப் பெற்ற பின்பே திருவாவடுதுறை ஆதீன முதல் குரவராகிய திருப்பெருந்திரு நமசிவாய மூர்த்திகளுக்கு வழிபாடாவதும் ஆதினத்தில் உணவு பந்தி நடைபெறுவதும் வழக்கம். கருவூர்த் தேவருக்கு தஞ்சை இராசராசேச்சுரம் கோயில் வளாகத்தில் தனிச் சந்நிதி உள்ளது. தஞ்சைப் பெருவுடையாருக்கு அஷ்ட பந்தன மருந்து பலமுறை சாற்றியும் இளகிக் கொண்டிருந்தது. கருவூர்த்தேவர் பெருமான் அருளால் மருந்தை இறுகும்படி செய்தார். இது வரலாறு.

“திருவிசைப்பா” என்ற சொல்லுக்கு பொருள் திரு–என்றால் தெய்வத் தன்மை வாய்ந்த என்ற பொருள்படும். இசை – என்றால் அழகு, இனிமை என்பது பொருள். பா– என்பது பாமாலை மொத்தத்தில் “திருவிசைப்பா” என்பது தெய்வத்தன்மை வாய்ந்த அழகுள்ள பாடல்கள் கொண்ட நூல்

இப்பொழுது தருமை ஆதீன 26வது குருமகா சந்நிதானமாக விளங்கும் திருப்பெருந் திரு. சண்முக தேசீக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் 9ம் திருமுறைக்கு ஆசிஉரை வழங்கியுள்ளார்கள். அவர்களுடைய ஆசி உரையில் “இசை என்பது இசைப்பது என்னும் பொருளை உடையது. ஒருவரது எண்ணங்களை – கருத்துக்களை, அறிவியலை, மற்றொருவருடைய கருத்தாகிய அறிவுடன் இசைவிப்பது.

அறிவே இயற்தமிழ். அவ்வறிவை இசைப்பாடல்களால் மற்றவருக்கு இசைவிக்கும் பாடல்களே இசைத்தமிழ் பாடல்கள்.

நடிப்பால் மெய்ப்பாட்டால் அறிவைப் பிறருக்குப் புலப்படுத்துவதே நாடகத்தமிழ்.

மக்கள் மருட்சி அடையாமல் தெருட்சியுடன் அறிவைப் புரிந்து கொள்வதற்கு இசைப்பாடல்களும் நாடகமும் பெரிதும் துணை புரிவன”.

## தமிழ் மொழியின் சிறப்பு

தமிழ்மொழியில் மட்டுந்தான் இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்பன உள்ளன. இம்முத்திற பாகுபாடு வேறு உலக மொழிகள் எதிலும் கிடையாது என்பது மொழியியல் வல்லுனர்களின்

கூற்று. எனவே தமிழ்மொழியை நம் இளைஞர்களுக்குப் புகட்ட வேண்டியது ஒவ்வொரு தமிழரின் குறிப்பாகச் சைவப் பெருமக்களின் கடமையாகும். தமிழ்மொழியுடன் திருமுறைகளை பண்ணுடன் இசைப்பதற்கும் சைவப் பெருங்குடி மக்கள் நம் சிறுவர்களுக்கு பழக்க ஆவன செய்ய வேண்டும் என்று பணிவுடன் இத்தருணத்தில் வேண்டிக் கொள்கிறேன்.

திருவிசைப்பாவில் ஆறு பண்கள் பாடப்பெற்றுள்ளன. “சாளரபாணி” என்றொரு பண். இப்பண் திருவிசைப்பாவைத் தவிர வேறு திருமுறைகளில் இல்லை. தேவாரத்தில் காணப்படாத “சளாரப்பாணி”ப்பண் திருவிசைப்பாவில் பயின்று வருவது திருவிசைப்பாவிற்கு ஒரு தனிச்சிறப்பு. பூந்துருத்தி நம்பிகாடநம்பி அருளிய இரு பதிகங்களில் சிதம்பரத்தில் பாடிய “முத்து வயிரமணி” (*9:19:1*) எனத் தொடங்கும் பதிகம் “சளரப்பாணி” பண்ணில் பாடப் பெற்றதாகும்.

சேந்தனார் தில்லையில் குடியேறி விறகு வெட்டி விற்று வாழ்வை நடத்தி வந்தார். அப்போது சேந்தனார் வறுமையில் வாடினார். இவர் இல்லத்தில் நடராசப் பெருமான் எழுந்தருளினார். இவரிடம் களியமுது பெற்று உண்டார். இந்த நிகழ்ச்சி இன்றும் அருள்மிகு நடராசப்பெருமானுக்கு மார்கழித் திருவதிரை நாளில் களியமுது நிவேதனம் நடைபெறுவதால் அறியலாம். தில்லையில் சேந்தனார் வசித்த காலத்து திருவாதிரைப் பெருவிழாவில் தேர் ஓடவில்லை. சேந்தனார் “மன்னுகதில்லை வளர்க நம்பக்தர்கள்” என்று தொடங்கும் திருப்பல்லாண்டுப் பாடலைப் பாடியதும் வடம் பிடித்து இழுக்காமல் தேர் தானே ஓடி நிலைக்கு வருமாறு செய்தார். இது வரலாறு.

திருப்பலாண்டு வாழ்த்திப் பாடுவது ஏனையவை எல்லாம் வணங்கிப் பாடுபவை.

வைணவ உலகில் திருப்பலாண்டுக்கு மிகப் பெரிய சிறப்பு உண்டு. பெரியாழ்வார் பாடிய பல்லாண்டு நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்தின் தொடக்கப் பாடலாகும்.

சைவத்தில் சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு ஒரே திருப்பதிகம் *13* பாடல்களைக் கொண்டது. திருவிசைப்பாவிற்கு பின் வைக்கப் பெற்றுள்ளது. திருவிடைக்களி முருகனைப் பற்றி “மாலுலாம் மனம் தந்து என் கையிற் சங்கம் வவ்வினான்” எனத் தொடங்கும் திருவிசைப்பா பதிகம் சேந்தனார் அருளியுள்ளார். ஏனைய

திருமுறைகளில் தனியாகக் கணபதிக்கோ முருகனுக்கோ அம்பிகைக்கோ தனிப்பதிகம் கிடையாது.

திருப்பெருந்திரு தருமை ஆதீனக் குருமணிகள் – இப்பொழுது தருமைபுர ஆதீன 26 வது குருமகா சந்நிதானமாக விளங்குபவர்கள். 9ம் திருமுறைக்கு வழங்கி உள்ள ஆசி உரையில் "தேவாரக் கோஷ்டிக் கானத்தை பலமுறை தியாகராச சுவாமிகள் (தியாகையர்) கேட்டவர். தேவாரப் பண் அமைப்புகளை, தியாகையார் தமது கீர்த்தனைகட்குப் பண் அமைத்துப் பாடி உள்ளமையை இசைப் பேரறிஞர் உயர்திரு. எம். எம். தண்டபாணி தேசிகரும், பேராசியர் இராமநாத ஐயரும் பாடிக்காட்டி உள்ளமையால் உணரலாம்.

தேவாரக் கோஷ்டியில் கையாண்டு வந்த பஞ்சபுராணத்தையே பஞ்சரதக் கீர்த்தனை என்ற பெயரில் தியாகப் பிரமம் பாடி வந்துள்ளார். கன இராகங்களில் ஐந்தில், ஐந்து கீர்த்தனைகளை பாடியுள்ளமையைத் தான் "பஞ்சரத்தினக் கீர்த்தனைகள்" என்று சொல்லுகிறார்கள்.

மற்றைய திருமுறைகட்கு இல்லாத தனிச்சிறப்பு ஒன்று 9ம் திருமுறைக்கு உண்டு.

வீடுகளில் செய்யும் ஆன்மார்த்த பூசை முடிவிலும் திருக்கோயில்களில் செய்யும் பரார்த்த பூசை முடிவிலும் பன்னிரு திருமுறைகளை ஓதியே தோத்திரம் செய்ய வேண்டும். இயலாதபோது பஞ்சபுராணப் பாடல்களையேனும் அவசியம் ஓதல் வேண்டும் என்று முன்னோர் வரையறை செய்துள்ளனர்.

மூவர் தேவாரத்தில் ஏழு திருமுறைகளுள் எண்ணாயிரம்(8000) பாடல்களுக்கு மேலுள்ள பாடல்களுள் ஒரு பாடல், 656 பாடல் கொண்ட எட்டாம் திருமுறையில் ஒரு பாடல், 301 பாடல்கள் கொண்ட 9ம் திருமுறையில் திருவிசைப்பா திருப்பால்லாண்டு ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பாடலாக இரண்டு, 4286 பாடல்கள் கொண்ட பன்னிரண்டாம் திருமுறையில் – பெரியபுராணப் பாடல் ஒன்று – இவையே பஞ்சபுராணம்.

பக்தி அமுதை இலக்கியச் சுவையோடு தரும் அரிய திருமுறை 9ம் திருமுறை என்பதில் எந்த ஐயமும் இல்லை. தொட்ட இடமெல்லாம் இனிக்கும் தேன் ஊற்றாகத் திகழ்கிறது 9ம் திருமுறை. இது சிந்திக்க இனியது. வந்திக்க நல்வழி காட்டுவது.

திருமுறைகளை பெரிவர்களாகிய நாம் முதற்கண் தினமும் ஓத வேண்டும். பின்னர் திருமுறைகளைக் குழந்தைகளுக்கு ஓதப் பழக்க வேண்டும். முக்கியமாகப் பன்னிரு திருமுறைகளையும் வாங்கி நம் வீடுகளில் வைக்க வேண்டும். பன்னிரு திருமுறைகள் நமக்குப் பின் நாம் விட்டுச் செல்லும் முக்கிய சொத்தாக இருக்க வேண்டும். இப்பன்னிரு திருமுறைகளில் உள்ள மந்திரச் சொற்களின் ஆற்றல் நம்மை மேல் நிலைக்குக் கொண்டு செல்லும். வாழ்வில் அனைத்து நன்மைகளையும் திருமுறைகள் உண்டாக்கும்.

பன்னிரு திருமுறைகளை இன்றே வாங்கி வீடுகளில் வைத்து ஓதப் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

மீண்டும் திருமுறைகள் வாழ்வை வளப்படுத்தும். திருமுறைகளை யாவரும் ஓதுவோம்! உயர்வோம்!

**சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம், இலங்கை**
**சைவநெறித்தேர்வு, தமிழ்மொழித் தேர்வு-2015**
**தோற்றிய சைவசமயகுரவர் பாடசாலை**
**மாணவர்களின் பெறுபேறுகள்**

| மாணவர் பெயர் | தந்தை பெயர் | தரம் | பெறுபேறு சைவ நெறி | பெறுபேறு தமிழ் |
|---|---|---|---|---|
| செல்வன் சஜீவன் | விஜயரங்கன் | 5 | A | S |
| செல்வி ஹரிணி | யோகேஸ்வரன் | 5 | C | W |
| செல்வன் தரன் | நடராசா | 6 | C | C |
| செல்வன் பிரஜீவன் | விஜயரங்கன் | 6 | A | C |
| செல்வன் ஹரி | யோகேஸ்வரன் | 7 | A | S |
| செல்வி மீனுசா | பத்மகாந்தன் | 7 | A | C |
| செல்வி ராகவி | ரங்கநாதன் | 8 | A | C |
| செல்வி அஸ்வினி | இராஜானந்தன் | 8 | A | C |
| செல்வி றக்ஷிக்கா | திருமுருகா | 11 | A | —— |

| | |
|---|---|
| தோற்றிய மாணவர்–9 | தோற்றிய மாணவர்–8 |
| சித்தியடைந்தோர்–9 | சித்தியடைந்தோர்–8 |
| சித்திவீதம் – 100% | சித்திவீதம் – 100% |

# சேக்கிழார் காட்டும் மனையறம்

திருமுறைமணி புலவர் ஏ. வேலாயுதன் எம்.ஏ.

திருக்குறளின் அறத்துப்பால் முதலில் இல்லறம் பற்றியும் தொடர்ந்து துறவறம் பற்றியும் தெரிய உணர்த்துகின்றது. இல்லறம் எனினும் மனையறம் எனினும் ஒருபொருள் குறித்ததேயாம். இல்லறம் புரிதல் இல்வாழ்க்கை. இம்மனையறத்தினையே திருத்தொண்டர் புராணத்துள் நாயன்மார் வாழ்வியல் காட்சிகளில் விளங்கக் காட்டி உணர்த்துகின்றார் தெய்வச் சேக்கிழார். இத்திருக்காட்சிகளைத் திருக்குறளின் மனையறம் பற்றிய இலக்கணத்தின் வண்ணமிகு பண்டைத் தமிழ் மக்கள் வாழ்ந்துயர்ந்த இலக்கியக் காட்சிகளாகவும் காணலாம். வரலாற்று உண்மை எனவும் கண்டு உணரலாம்.

## அன்புப் பண்பில் அறமே புரிதல்

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.”

என்கின்றது திருக்குறள். “அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு” எனவும் கூறுவதால் அன்பு, பிறர்க்குதவி புரிந்து, அப்பிறர் மகிழ்வில் தாம் இன்புறல் என்னும் தன்மையது என்று உணர்த்துகின்றது. மற்று, தம்புகழ் விரும்பியும், தற்பெருமை பாராட்டியும், புண்ணியம் நோக்கியும் புரிவனவெல்லாம், “இம்மைச் செய்தன மறுமைக்காமெனும் அறவிலை வணிகன்” (புறநானூறு) என்றாற் போன்று ஆகுல நீரவாம் போலி அறமே என்றும் காட்டுகின்றது. பண்டைத் தமிழ் நூல்கள் விருந்தோம்பலை மனயறத்தின் முதன்மையாகவும் ஓங்குயர்வாகவும் போற்றுகின்றன. தன் மனைவாழ்வில் “தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்கோடலும் இழந்தவென்னை” என்று விருந்தோம்பல் புரிய இயலாமைக்கு வருந்துகிறாள் கண்ணகி என்று கூறுகிறது சிலப்பதிகாரம். விருந்தோம்பலை எந்நிலையிலும் ஓம்பிப் பேணுதல் வேண்டும் என்னும் அன்புப் பண்பின் உயர் அறமாக நாயன்மார் வாழ்வியல் காட்சியில் காட்டுகின்றார் சேக்கிழார்,

## பெறவரிய விருந்து

புனிதவதியார் கணவன் பரமதத்தன், தன் மாமனார் தனதத்தன்,

மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பில் தனம் கொடுத்ததற்பின்
.................................................................................................

தகைப்பில் பெருங்காதலினால் தங்குமனைவளம் பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினில் மேம்படுதல் மேயினான்.

என்கின்றார் சேக்கிழார்.

அவன் தன் மனைவியார் புனிதவதியார் பற்றி

"ஆங்கவன்தன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியஅன் புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின் பண்புவழா மையிற் பயில்வாழ்"

என்று தெரிவிக்கின்றார். இவற்றுள் முதற் பாடலில் கணவன் மனைவளம் பெருக்குதல், மனையறம் புரி அன்பினாலன்றித் தான் யாரினும் மேம்படு செல்வனாம் நோக்கில் புரிதலும், அடுத்த பாடலில், மனைவியார் இறைவன் திருவடிக்கீழ் ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப் பெருகவும் அப்பாங்கிலேயே மனையறத்தின் பண்பு வழாமையிற் பயில்வார் என்றும் காட்டுகின்றார் சேக்கிழார்.

பரமனார் திருத்தொண்டர் ஒருவர் உணவு மிகு வேட்கையினால் அம்மையார் மனையுட் புகுந்தார். மெய்த்தொண்டர் தம் மூப்புறுந் தளர்வும், முடுகிய வேட்கைத் தீப்பசியின் நிலையும் அவற்றால் அயர்ந்தணைந்த தன்மையும் கண்ட வெறிமலர்மேல் திருவனைய அம்மையார், "கறியமுது ஆகவில்லை திருவமுது மட்டுமே கூடியுள்ள" அந்நிலையில், "விடையவன்றன் அடியாரே பெறலரிய விருந்தானால் பேறிதன் மற்றில்லை" யெனும் அறிவினராய், இல்லாளன் வைக்க எனச் சொல்லி வைக்கப்பட்டிருந்த மாங்கனிகள் இரண்டில் ஒன்றைக் கொடு வந்து விரைந்தணைந்து அடியார் தமை அமுது செய்வித்தார் என்கிறார் சேக்கிழார்.

இளையான்குடி மாறனார் தமக்கே ஓர்தாரிப்பின்றிப் பசிதலைக் கொண்டு

"பாரித் தில்லம் அடைத்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன்"

என்று இல்லறத்தின் அன்புப் பண்பு மிக்க தன்மையால் அடியாரை விருந்தாக எதிர்கொண்டு வரவேற்று உணவூட்ட முற்பட்டார் எனக் காட்டுவதும் மனையறத்தின் திருக்காட்சியாம்.

பரஞ்சோதியார் சிறுத்தொண்டர் இல்வாழ்க்கையில் திருவெண்காட்டு நங்கையெனும் "காதல் மனைக் கிழத்தியார்

கருத்தொன்ற வரும் பெருமை, நீதி மனையறம் புரியும் நீர்மையினில் நிலை நிற்பார்'' என்று தெரிவிக்கின்றார் சேக்கிழார். விருந்தோம்பல் திறம் காண் துறை பலவற்றுள் சிறுத்தொண்டர் மேற்கொண்டது, அடியாரை ''நாள்தோறும் முன்னூட்டிப் பின்னுண்ணும் நியதியாகக் கொள்ளும் துறை'' என்று உணர்த்துகின்றார் சேக்கிழார். சிறுத்தொண்டர் வாழ்வின் ''மனையறத்தின் வேராகி விளங்கு திருவெண்காட்டு நங்கை'' என்று அவர்தம் வாழ்க்கைத் துணைவியாரைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

**மனையறத்தின் - மங்கலம் -நன்கலன்**

திருஞானசம்பந்தர் தந்தையார் சிவபாதஇருதயர், தாயார் பகவதியார்,

''மனையறத்தின் இன்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடிய சேவடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து நீராக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம் புரிந்தார்.''

என்று தெரிவிக்கும் சேக்கிழார், மங்கலமாம் மனைமாட்சியும் மற்றதன் நன்கலன் நன்மக்கட்பேறும் ஆகப் பகவதியார் கற்பின் மாண்பும், இன்புறு மகப்பேற்றினையும் எடுத்துக்காட்டி, நன்மக்கட் பேறாக வாய்க்கத் தம்பதியார் தவம்புரியும் திருக்காட்சியை உணர்த்துவது உணர்வின் காணத்தகும் சிறப்பாம்.

பெற்ற பிள்ளைகட்குப் பெற்றோர் தம் முதலாய கடமை கல்வி கற்பித்தலாம். சிறுத்தொண்டர் திருமகனாம் சீராளதேவரை,

''சிந்தைமலர் சொல்தெளிவில் செழுங்கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்தவரைப் பள்ளியினில் இருத்தினார்.''

என்கின்றார் சேக்கிழார். மருள்நீக்கியார்க்குச் (திருநாவுக்கரசர்) சிறுவயதில் மயிர்நிக்கு மணவினை (இக்காலத்தில் மொட்டையிடுதல்) செய்ததற்பின்

''பொருள்நீத்தங் கொள வீசிப் புலன்கொளுவ மனமுகிழ்த்த
சுருள்நீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார்''

–திருநாவுக்கரசு புராணம் 20

என்பதனால், மக்களுக்குச் சிறுவயதில் கல்வி புகட்டும் பெற்றோர் தம் மனையறத்தின் கடமையைத் தெளிவாகக் காட்டுகிறார் சேக்கிழார்.

மற்றும் இனியவை கூறல் முதலிய அன்புப் பண்பின் நலன்களும், ஒப்புரவு ஈகை, புகழ் முதலிய அறம்பயில் திறங்களும் திருத்தொண்டர் வாழ்வியல் நிகழ்வுகளில் தெரியக்காட்டும் தெய்வச் சேக்கிழாரின் செந்தமிழ்க் கவிதைகளில் கண்டு தெரியலாம். அதற்கு இக்கட்டுரை கற்போர் உணர்விற்குத் தூண்டு சுடராய் அமைக! திருவருள் புரிக!.

**(நன்றி:** நான்காவது உலகச் சேக்கிழார் திருமுறை மாநாடு – செழுமலர்)

சென்ற இதழ் தொடர்ச்சி

# என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியர்

(திரு. மு. வைரமுத்து ஜே. பி.முன்னாள் சி.சி.எஸ்)

## 6. பிரபஞ்சம் இறைவன் மார்பில் ஒரு தங்கப் பதக்கம்

ஒரு தவ சிரேஷ்டர் ஒரு இல்லத்திற்குத் தாமாகவே எழுந்தருளினால் ஏதோ ஒரு பயன் இல்லாதிருக்குமா? சிறிது நேரம் ஓரிடத்தமர்ந்து, சுவாமி தன் ஆச்சிரமத்துக்குத் திரும்பிப் போகும்போது கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்த முறையைப் பற்றிச் செய்த உபதேசத்தைச் சிந்திக்கலானேன். ஆண்டவனின் படைப்பில் குறையேது? குற்றமேது? எல்லாம் சரியாகத்தானே இருக்கும். இது குற்றம், இது குணம், என்று பகுத்துப் பார்த்தால் எங்கள் அறியாமையினால் நிகழ்வதன்றோ! இந்த அறியாமையைப் போக்கத்தானே சுவாமிகள்,



"இது அருமையான உலகம்"

"ஒரு பொல்லாப்பும் இல்லை"

என்ற அமிர்த வாக்கியங்களை அடிக்கடி எல்லோருக்கும் சொல்வது. இவற்றை எத்தனை தரம் கேட்டிருந்தாலும் அற்பராகிய நாங்கள், மற்றவர்களில் குறை குற்றம் காணுவதிற்தானே வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவழிக்கின்றோம். இருவர் தெருவிலோ, திண்ணையிலோ சந்தித்தால் மூன்றாமவரின் குறை குற்றங்களைப் பற்றித்தானே பேசிக்கொள்வது பலர் வழக்கம்.

இந்தப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த பரம்பொருள் அதைக் காத்தும், மறைத்தும், அழித்தும், அருளலையும் செய்கின்றது.

இப்பிரபஞ்சத்தின் பஞ்சக் கிருத்தியங்களைச் செய்யும் நிலையில் அப்பரம்பொருள் பிரபஞ்சத்திலுள்ள சகல சராசரங்களுடனும் ஒன்றாயும், வேறாயும் உடனாயும், கலந்து அவற்றை வியாபித்து. அதை இயக்க வேண்டியதாகிறது.

நிற்பனவும், சலிப்பனவும், சைவம் என்பதுவும், அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதும் சித்தாந்தம். ஆகவே, பிரபஞ்சம் இயங்குவது அவனது ஆணைப்படி என்பது வெளிப்படை.

''வான்ஆகி மண்ஆகி வளிஆகி ஒளிஆகி
ஊன்ஆகி உயிர்ஆகி உண்மையும் ஆய் இன்மையும் ஆய்க்
கோன் ஆகி யான் எனது என்று அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.''

– திருவாசகம் 19

என்கின்றார் மாணிக்கவாசகர்.

''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே.''

(6 – 95 – 3)

என்கின்றார் திருநாவுக்கரசர்.

''சூரியன் வருவது யாராலே தூமதி தவழ்வது யாராலே
விண்மீன் மிளிர்வது யாராலே, வெயில் எறிப்பது யாராலே,
கண்ணினைக் காண்பது யாராலே, காற்றும் அடிப்பது யாராலே,
தண்ணீர் பெருகுதல் யாராலே, தக்கோர் புகழ்வது யாராலே,
பூமி சுழல்வது யாராலே, பூக்கள் மலர்வது யாராலே
கால்கள் நடப்பது யாராலே, கைகள் எடுப்பது யாராலே,
எண்ணிப்பார் நீ அறிவாயே, எல்லாம் சிவன் செயல் குறியாயே.''

என்கிறார் யோக சுவாமிகள்.

''நன்னாரிற் பூட்டிய சூத்திரப்பாவை நன்னார் தப்பினால்
தன்னாலும் ஆடிச் சலித்திடுமோ அத்தன்மையாப்போல்
உன்னால் யானும் திரிவதல்லால் மற்றுனைப் பிரிந்தால்
என்னால் இங்காவதொன்றுண்டோ இறைவா கச்சி ஏகம்பனே.''

என்கிறார் பட்டினத்துப் பிள்ளையார்

> "எங்குந் திருமேனி, எங்கும் சிவசக்தி,
> எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்,
> எங்கும் சிவமாய் இருத்தலால், எங்கெங்கும்
> தங்கும் சிவன்அருள் தன் விளையாட்டே"

என்கின்றார் திருமூலர்

இப்படியே உலகிலுள்ள சகல சமயங்களும் இப்பிரபஞ்சம் ஒரு பிரமபிதாவின் வல்லமைக்கு உட்பட்டதாய் இவன் ஆணைக்கு அடங்கியே இயங்குகின்றது என்று பறை சாற்றுகின்றன. சகல ஞானிகளும், இருடிகளும், அடியார் கூட்டங்களும் தேடிக் கண்டு கொண்ட உண்மையும் இதுவே. அப்படியாயின் உலகத்தில் பிழை, நீதியீனம், குறைபாடு, எப்படி இருக்க முடியும்? என்றும், எங்கும், எப்போதும், தன் ஆணையைத் தவறாது செலுத்திக் கொண்டிருக்கும் கருணாமூர்த்தியாகிய பரம்பொருளின் முன்னிலையில் பிழையோ நீதியீனமோ நடக்கமுடியுமா? அப்படி நடக்குமாயின் இறைவனின் இறைமைக்கு என்னாகும்?

ஆண்டவனின் முழுமுதற் தன்மையாகிய அரும்பெரும் தத்துவத்தை, ஆணித்தரமாக விளக்குவதற்கல்லவா? முழுதும் உண்மை, அது எப்பவோ முடிந்த காரியம். ஒரு பொல்லாப்பும் இல்லை. என்னும் மகாவாக்கியங்களை யோகர் சுவாமிகள் அடிக்கடி சொல்லிக் கொள்வது அற்ப அறிவுடைய நாங்கள் இந்த உண்மையை உணராமையினால் அன்றோ! இது பிழை, அது சரி இவன் கெட்டவன், அவன் நல்லவன், உலகமே கெட்டுப் போனது என்று சதா குற்றம் காணுவதிலும் குறை கூறுவதிலும் பொழுதைப் போக்குகின்றோம் நாம்.

மனிதன் உலகைப் பார்க்கும்போது தன் பிரதிவிம்பத்தையே காண்கின்றான். அவனுடைய அறியாமை காரணமாக அவன் காண்பதெல்லாம் தலைகீழாகவே அவனுக்குத் தென்படுகின்றது. இஃது அவனின் ஊனக்கண் பார்வை. ஞானக் கண்கொண்டு பார்க்கும் ஆற்றலைப் பெற்ற அன்றுதான், அவன் உள்ளத்தை உள்ளபடியே அறிய முடியும். அன்றுதான் உலகில் பிழை நடப்பதில்லை என்பதை உணர முடியும். அன்று என்றுதான் வருமோ?

. . . . தொடரும்

## நீத்தார் நினைவு

# அகவை தொண்ணூற்று இரண்டில் அமரத்துவம் அடைந்த பேரறிஞர் முருகவே பரமநாதன்



அமரர் பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள் தமது 92 ஆவது அகவையில் 31-07-2016 அன்று திருவடிக்கலப்புற்றார் என்ற செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைந்தோம். அவரின் ஆன்மா சாந்தி பெறவேண்டி 05-08-2016 வெள்ளிக்கிழமை மன்றத்தில் வழிபாடு செய்தோம். அவரின் மனைவியாரோடும், மகளுடனும் அவர்களின் துயரத்தில் பங்கு கொண்டு எங்களின் ஆழ்ந்த துயரத்தையும் மன்றத்தின் சார்பிலும் எங்கள் சார்பிலும் கூறிப் பகிர்ந்து கொண்டோம்.

அவர் கனடா சைவ சித்தாந்த மன்றம் வெளியிட்டு வரும் அன்புநெறி திங்கள் இதழின் சிறப்பாசிரியர்களில் ஒருவராகக் கடமை ஆற்றி பல அரிய கட்டுரைகளை அன்புநெறி இதழுக்கு எழுதி வந்தவர். கனடா சைவசித்தாந்த மன்றம் நடத்திவரும் திருவருட்செல்வர் விழாக்களிலும், திருவாசக விழாக்களிலும் மற்றும் நிகழ்வுகளிலும் கலந்து சிறப்புரைகள் ஆற்றியவர். மன்றம் வெளியிட்ட "திண்ணபுர அந்தாதி" என்ற நூலுக்கு அணிந்துரை வழங்கியவர். பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்களும், அவரின் மனைவியார் திருமதி திருப்பதி பரமநாதன் அவர்களும் மன்றம் நடத்திய 14ம் திருவருட் செல்வர் விழாவில் (2009 ஆகஸ்டில்) முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்தார்கள்.

பெரியார் அவர்களின் பிறப்பிடம் புலோலி வல்லிபுரம் (சிங்கை நகர்) ஆகும். அவரின் பெற்றோர் திரு. வேலுப்பிள்ளை, திருமதி இலட்சுமிப்பிள்ளை வேலுப்பிள்ளை ஆவர். இவரின் பிறந்த நாள் 30-01-1924. இவர் நல்லாசிரியராக இலங்கை மலையகத்திலும், யாழ்ப்பாணத்திலும் 35 ஆண்டுகள் பெரும்பணியாற்றி இளைப்பாறி உள்ளார்.

ஆசிரியர் பரமநாதன் அவர்களின் மனைவியார் திருமதி திருப்பதி பரமநாதன்; அவர்கள் ஊரெழுவைச் சேர்ந்த திரு சின்னத்தம்பி

தம்பதிகளின் மகள்; ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர்கள் இருவருக்கும் சித்திரா, சரத்சந்திரா, ரவிச்சந்திரா, சுபத்திரா என்போர் மக்களாகப் பிறந்தனர்.

ஆசிரியர் அவர்கள் சமயம், தமிழ், கல்வி, இலக்கியம் ஆகிய துறைகளில் கருத்துச் செறிவு நிறைந்த சொற்பொழிவுகளை ஆற்றும் சிறந்த சொற்பொழிவாளர்; சிறந்த கவிஞர்; ஆழமான சிந்தனைப் போக்கான கட்டுரைகளை எழுதுபவர்; நல்ல நினைவாற்றல் உடையவராயிருந்தவர்; பலநூல்களின் ஆசிரியர் ஆவார். இவர் ஊரெழு மீனாட்சிமாலை, வல்லிபுரத்தாழ்வார் திருவடிப் புகழ்ச்சி, வல்லிபுரம் திருவந்தாதி, போன்ற கவிதை நூல்களையும், எங்கள் குருநாதன் திருவாசகசுவாமிகள், ஞானத் தந்தை, நவநாத சித்தர், சபாரத்தினம் என்னும் திருவாசகப் பேரூற்று, ஆழ்கடலான், வேலா வடிவேலா, நினைக்க நினைக்க, ஈழத்துச்சித்தர் குடைச்சுவாமிகள், சைவத் திருமுறைகளின் விழுமியம் போன்ற உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். இலங்கையில் ஆழ்கடலான், சிங்கையாழியான், இளம்பிறையான் போன்ற புனைபெயர்களில் ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, தினகரன், உதயன் போன்ற பத்திரிகைகளிலும் கனடாவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், அன்புநெறி, ஆத்மஜோதி, கொழும்பு சைவநீதி, அருளொளி, கலசம், ஞானச்சுடர், கனடா சைவநீதி போன்ற சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் எழுதி வந்தவர்.

ஆசிரியர் பதிப்பித்த நூல்கள்: இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா அவர்களின் உரையுடன் கூடிய "வல்லிபுர மாயவன் பிள்ளைத் தமிழ்", புலவர் கு. பெரியதம்பி அவர்கள் பாடிய "வல்லிபுர ஆழ்வார் கெருடன் விடுதூது","குருக்கட்டுச் சித்திவிநாயகர் ஊஞ்சல் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களது "தென்மராட்சி வடமராட்சி இடப்பெயர் ஆய்வு" என்பன.

பெரியார், முழக்கம் (முதற்பரிசு), உதயன் (முதல்–மூன்றாம் பரிசு) தமிழர் செந்தாமரை (மூன்றாம் பரிசு) போன்றவை நடத்திய கவிதை இலக்கியப் போட்டிகளில் கலந்து பரிசுகள் பெற்றுள்ளார்.

இவருக்கு இந்துசமயப் பேரவை 2000 ம் ஆண்டில் **பேரறிஞர்** என்ற பட்டத்தையும், கந்த முருகேசனார் கலாமன்றம் 2002 இல் **வித்துவசிரோமணி** என்ற பட்டத்தையும், 2005 ஆம் ஆண்டு தமிழர் தகவல் நிறுவனம் **தமிழர் தகவல் விருதினையும்**, ஆசிரியர் பரமநாதன் அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்துள்ளன.

இத்தகைய பெருமைக்குரிய நல்லாசிரியர் முருகவே பரமநாதன் அவர்களின் ஆன்மா சாந்தி அடைய வேண்டி சிவகாமி உடனுறை நடராசப் பெருமான் திருவடியை வணங்குகிறோம்.

‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்’. குறள் 50

(ஆசிரியர் தி. வி.)

**சேரமான் பெருமாள் நாயனார்**
**குருபூசை நாள்: ஆடிச் சுவாதி**

மன்னர் பிரானெதிர் வண்ணா னுடலுவ ரூறிநீறார்
தன்னர் பிரான்தமர் போல வருதலுந் தான் வணங்க
வென்ன பிரானடி வண்ணானெனவடிச் சேரனென்னுந்
தென்னர் பிரான்கழ றிற்றறி வானெனுஞ் சேரலனே

சேரற்கு தென்னா வலர்பெரு மாற்குச் சிவனளித்த
வீரக் கடகரி முன்புதன் பந்தி யிவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில் வீரனை வெற்றி கொண்ட
சூரற் கெதுள்ள நன்றுசெய் தாயின்று தொண்டுபட்டே

– நம்பியாண்டார்நம்பி




**டன்டாஸ் பல் மருத்துவமனை**
**போவியாட் பல் மருத்துவமனை**
**குடும்ப பல் மருத்துவர்**
**Dr. Vanathy Jeevakumar**
**டாக்டர் திருமதி வானதி ஜீவகுமார்**

*Family and General Dentistry*

**சகல பல் மருத்துவ சேவைகள்**
(Including Braces Implants)
வாரத்தில் ஏழு நாட்கள்

* Veneers * Crowns and Bridges * Braces
* Root Canal Therapy * Dental Implants
* Fillings * Extractions * Dental Cleanings
* Zoom Whitening * Mouth-guards
* Dentures * Bad Breath Prevention
* Oral Home Care Instruction

Dundas Dental Centre
29C Dundas Street E. Mississauga,
Ont., L5A 1V9 (Hurontario/Dundas)
Phone **905- 281-0273**
Fax: (905) 281-8792

Bovaird Dental Centre
10025 Hurontario St. Unit 12
Brampton, Ont. ,
(Hurontario/Bovaird Dr.)
Phone **905 -846-9929**



சுந்தரமூர்த்தி நாயனார், குருபூசை நாள்: ஆடி சுவாதி



சேரமான் பெருமாள் நாயனார், குருபூசை நாள்: ஆடி சுவாதி



இளையான்குடிமாற நாயனார்,
குருபூசை நாள்: ஆவணி மகம்

